ஸ்ரீ:

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

இராமாநுச நூற்றந்தாதி.

Refurbished by Chennai Rengaswamy Srinivasan

(Released by Maaran's Dog , Toronto , Canada)

நூறு வெண்பாக்களாலேனும் நூறு கட்டளைக் கலித்துறைகளாலேனும் அந்தாதித் தொடையாற் கூறுவது நூற்றந்தாதியாம். இத்திவ்யப்ரபந்தம் நூறு பாசுரங்களுக்குமேல் அதிகமாக எட்டுப் பாசுரங்கள் கொண்டதாயினும் நூற்றந்தாதி யென்னத் தட்டில்லை; நூறு ஆயிரம் முதலிய பெரிய எண்களுக்குப் பரிகேட்டு குறைவிலும் மேற்படியிலும் அவை நூறு ஆயிரம் என்னத் தகுந்தவையேயாம்.

இப்ப்ரபந்தத்தில் நூற்றெட்டுப் பாசுரங்கள் அமைந்ததற்கும், பாட்டுத்தோறும் இராமாநுசத் திருநாமம் தட்டாமல் அமைக்கப்பட்டிருப்பதற்கும் பெரியோர் ஒரு காரணம் கூறுவர், — எம்பெருமானார் திருவடிகளில் மிக்க அன்புபூண்டவர்கட்கு இப்ப்ரபந்தம் ஸாவித்ரிபோலே நித்யாநுஸந்தேயமாகவேணுமென்று பாட்டுத்தோறும் திருநாமத்தை வைத்து நூற்றெட்டுப் பாட்டாக அருளிச்செய்தார் — என்று. ப்ரபந்ந ஸாவித்ரி என்றும் ப்ரபந்ந காயத்ரி என்றும் இதனை நம்மவர் கூறிப் போருவர்கள்.

இப்ப்ரபந்தம் எம்பெருமானார் காலத்திலே அவதரித்ததாயினும், பெரியபெருமாள் அமுதனார்க்கு அருளப்பாடிட்டு எம்பெருமானாரால் திருச்செவி சாற்றப்பட்டதாதலால் இது ஆழ்வார்களருளிச் செயல்களோடு சேர்த்து அநுஸந்திக்கலாயிற்று. திருக்கார்த்திகைக்குப் பின் ஆழ்வார் திவ்ய ப்ரபந்தங்கட்கு ஏற்பட்டுள்ள அநத்யயநம் இதற்கும் ஒக்கும்.

முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி, இயற்பா என்ற நான்கு ஆயிரங்களுள் நான்காவதான இயற்பாவில் ஸ்வதந்த்ர ப்ரபந்தமாகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த நூற்றந்தாதி. ப்ரணவார்த்தமான முதலாயிரத்தோடு நம்மாழ்வார் விஷயமான பாகவதசேஷத்வத்தை ப்ரதிபாதிக்கும் கண்ணிநுண்சிறுத்தாம்பைச் சேர்த்தாற்போல, கைங்கர்யத்தில் களையறுப்பதான இயற்பாவுடனே இதனைச் சேர்த்து அநுஸந்திக்கை பொருத்தமுடைத்தேயாம்.

(திருவரங்கத்தமுதனார் வரலாறு.)

இவ்வமுதனார், ஒரு பங்குனித்திங்களில் ஹஸ்த நக்ஷத்ரத்தில் மூங்கிற்குடியில் திருவவதரித்து, திருவரங்கம் பெரியகோயிலில் இருந்தமையே காரணமாகப் பெரியகோயில் நம்பி என்று ப்ரஸித்தராய் வாழ்ந்துவந்தார்.

[அஷ்டப்ரபந்தம் செய்தருளினவரும் பட்டர் திருவடிகளில் ஆச்ரயித்து உய்ந்தவருமான "பிள்ளைப்பெருமாளையங்கார்" என்பவர்க்கு இவர் திருத்தகப்பனார் என்று சிலரும், பாட்டனார் என்று சிலரும் சொல்லுவர்.]

இவர் எல்லா சாஸ்த்ரங்களையும் அறிகின்ற மஹா வித்வானாய், தமக்குச் சூழ்ந்த ஸம்பத்தாகக் கிடைத்த ஸந்நிதி புரோஹித வ்ருத்தியையும் புராணபடனக் கைங்கர்யத்தையும் பெற்று மிகவும் ஐச்வர்யசாலியாய்ச் செருக்குடன் வாழ்ந்துவரும் நாளிலே, உலகங்களை வாழ்விக்கத் திருவனந்தாழ்வானது திருவவதாரமாய்த் திருவவதரித்த எம்பெருமானார் தமது இயற்கையின் அருளாலே இவரைத் திருத்திப் பணிகொள்ளத் திருவுள்ளம்பற்றிக் கூரத்தாழ்வானுக்கு நியமிக்க, ஆழ்வானும் இவரை அநுவர்த்தித்து ஞானக்கடல் கொண்டுவந்து எம்பெருமானார் திருவடிகளிற் கொணர்ந்து சேர்க்க, எம்பெருமானாரும் அவரைக் குளிரக் கடாக்ஷித்தருளி ஆழ்வான் பக்கல் ஆச்ரயிக்கும்படி நியமிக்க, அப்படியே அவரும் ஆழ்வானை ஆச்ரயித்து உஜ்ஜீவித்த பூர்வாசார்யர்க் களை ஞானம்பெறும்படியான தெளிந்த ஆத்மகுணங்களை அந்த ஆசார்யன் திருவடிகளிலே வைத்துப் பரமப்ரேமையராயிருந்தார். இப்படியிருக்கையில், ஸ்வாசார்யருடைய உபதேசப்படிப் பரமத் தமக்கு ப்ராசார்யரான எம்பெருமானார் விஷயமாக ஒரு திவ்யப்ரபந்தங்களைச் செய்து அதனை எம்பெருமானார் ஸந்நிதியிற் கொணர்ந்துவைக்க, எம்பெருமானாரும் அதனை அவிழ்த்துக் கடாக்ஷிக்க, அதை தமது திருவுள்ளத்துக்கு இசைந்ததாகையாலே அதனைக் கிழித்தெறிந்துவிட்டு அவரை நோக்கி, 'என்னைப் பற்றிப் பிரபந்தம் பாடவிருப்பம் உமக்கிருந்ததாகில், ஆழ்வார்களிடத்தும் உகந்தருளின நிலங்களிடத்தும் எனக்குள்ள ப்ரேமம் தோற்றுமாறு ஒரு பிரபந்தம் செய்யும்' என்று நியமித்தருள, இவரும் அப்படியே செய்கிறேனென்று அந்த நியமனத்தை சிரஸாவஹித்து எம்பெருமானார்க்கு ஆழ்வார்களிடத்திலும் திவ்ய தேசங்களிடத்திலுமுள்ள அன்பை நன்கு விளக்குவதாய் இந்தப் பிரபந்தத்தை அருளிச் செய்து எம்பெருமானார் ஸந்நிதியிலே வந்து வணங்கி 'இதைக் கேட்டருளவேணும்' என்று பிரார்த்தித்து அநுமதிபெற்றுக் கூரத்தாழ்வான் முதலானோர் கோஷ்டியாக இருக்கிற அவ்வமயத்திலே இந்தப் பிரபந்தத்தை விண்ணப்பம் செய்ய, எம்பெருமானார் மற்றை முதலிகளோடும் திருச்செவி சாற்றித் தலைதுலுக்கிப் போரவுகந்தருளி, தம்திருவடிகளில் ஸம்பந்த முடையார்க்கெல்லாம் இந்தப் பிரபந்தத்தை அன்று தொடங்கி என்றும் நித்யாநுஸந்தேயமாம் படி கற்பித்தருளியதும் தவிர, அமுது போன்று அமுதனைக்கொண்ட பிரபந்தமையால் அவர்க்கு அமுதன் என்ற திருநாமத்தையும் ப்ரஸாதித்தருளி மிகவும் கடாக்ஷித்தருளினார். ஆகையால் அதுமுதல் 'பெரியகோயில் நம்பி' என்ற திருநாமம் மாறித் திருவரங்கத்தமுதனார் என்ற திருநாமம் வழங்கத் தொடங்கிற்று. இப்ப்ரபந்தத்திற்கு ப்ரபந்ந காயத்ரி என்ற திருநாமமும் அன்றுதொடங்கி வழங்கலாயிற்று.

இந்த விருத்தாந்தம் சிறிது மாறுபாடாகவும் சொல்லப்படுவதுண்டு; எங்ஙனே யெனின்:— அமுதனார் எம்பெருமானாருடைய நியமனம் பெற்று இப்ப்ரபந்தம் இட்டருளுவதாக அமைய வனொந்தான் திருப்படிகளுக்கு இவ்வாறிருக்க ஒரு தென்னந்தோப்பின் திருமண்டபத்தில் வீற்றிருந்து பட்டோலை கொண்டிருக்கும்போது, அவ்வளவில் எம்பெருமானார் அழகியமணவாளனது விஜயத்தினால் ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய அந்தரங்கசிஷ்யர்களோடு அவ்விடத்தே எழுந்தருள அப்போது "செழுந்திரைப்பாற்கடல்" என்ற நூற்றைந்தாம் பாசுரம் தலைக்கட்டி, இருப்பிடம் வைகுந்தமென்ற பாசுரம் எழுந்தவுடனே அருளப்பெற்றதென்றும், அதுமுதலான மூன்று பாசுரங்களும் எம்பெருமானார் திருமுன்பே சேர்க்கப்பட்டன வென்றும், பிறகு அரங்கேற்றிய பின் 'இந்த விசேஷத்துக்கு ஸ்மாரகமாக இப்ப்ரபந்தத்திற்கு மாத்திரம் சாற்றுப் பாசுரங்கள் மூன்றாயிருக்கவேணும்' என்று ஆழ்வான் நியமித்தருளினா ரென்றும், ஆனதுபற்றியே மற்றைப் பிரபந்தங்களுக்கு இரண்டு பாசுரம் சாற்றுவதுபோலல்லாமல் இதற்கு மூன்று பாசுரம் சாற்றுக ஸம்ப்ரதாயம் நிகழ்கின்றதென்றும்.

ஸ்ரீ:-

இராமாநுச நூற்றந்தாதியின் தனியன்கள்.

வேதப்பிரான் பட்டர் அருளிச்செய்தவை.

முன்னை வினையகல மூங்கிற் குடியமுதன்
பொன்னங் கழற்கமலப் போதிரண்டும்—என்னுடைய
சென்னிக் கணியாகச் சேர்த்தினேன் தென்புலத்தார்க்கு
என்னுக் கடவுடையேன் யான்.

முன்னை வினை	முன்னே செய்த பாபங்களெல்லாம்	அணி ஆக	ஆபரணமாக
அகல	ஒழிவதற்காக,	சேர்த்தினேன்	பொருந்தவைத்துக் கொண்டேன்;
மூங்கிற் குடி அமுதன்	'மூங்கிற்குடி' என்னும் குலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய	யான்	இப்படி அமுதனாருடைய திருவடிகளைச் சூடப் பெற்ற அடியேன்
பொன் அம் கழல் கமலப்போது இரண்டும்	பொன்போல் அழகிய பாதாரவிந்தங்கள் இரண்டையும்	தென் புலத்தார்க்கு	தெற்குத் திக்கிலுள்ளாரான யமகிங்கரர்கட்கு
என்னுடைய சென்னிக்கு	எனது தலைக்கு	என்னுக்கு கடவு உடையேன்	ஏதுக்காகப் ப்ராப்தியுடையேன்?

* * * :—மூங்கிற்குடியென்ற மஹாகுலத்திலே தோன்றிய திருவரங்கத்தமுதனாருடைய திருவடித் தாமரைகளை நான் சிரோபூஷணமாக அணிந்துகொண்டேன்; அதனால் எனது வலிய கருமங்களும் தீயினில் தூசாகியொழிந்தன. இனி யமனுக்காவது யமபடர்களுக்காவது என் அருகே வருவதற்கு யாதொரு ப்ரஸக்தியுமில்லை என்றவாறு.

"முன்னை வினையகலச் சேர்த்தினேன்" என இயையும். [மூங்கிற்குடி.] வேயர்குலம் ஆலங்சிகுலம், கூரகுலம் என்பனபோல மூங்கிற்குடியென்பது ஒரு குலமுண்டாம். கமலப் போது=தாமரைப்பூ. அணி=ஆபரணம். சேர்த்தினேன்=சேர்த்தேன் என்றபடி; இன்—சாரியை.

என்னுக்கு+கடவுடையேன்=என்னுக்கடவுடையேன்; (நடுக்குறை) கெடுதல் விகாரப் புணர்ச்சி. என்னுக்கு=ஏதுக்காக என்கை; "என்னுக்கவளை விட்டிங்கு வந்தாய்" என்றார் குலசேகரப் பெருமாளும். [கடவுடையேன்.] கடவு=ப்ராப்தி; அதாவது—உரிமை. ...

நயந்தரு பேரின்பமெல்லாம் பழுதென்று நண்ணினர்பால்
சயந்தரு கீர்த்தி யிராமாநுசமுனி தாளிணைமேல்
உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமு தோங்குமன்பால்
இயம்புங் கலித்துறையந்தாதி யோதவிசை நெஞ்சமே.

நெஞ்சமே	மனமே!,	தாள் இணை மேல்	இரண்டு திருவடிகள் விஷயமாக
நயம் தரு	விஷயங்களால் தரப்படுகிற	உயர்ந்த குணத்து திரு அரங்கத்து அமுது	சிறந்த குணங்களையுடைய திருவரங்கத்தமுதனார்
பேர் இன்பம் எல்லாம்	சிற்றின்பங்கள் எல்லாம்	ஓங்கும் அன்பால்	பெருகின்ற மிக்க பக்தியினாலே
பழுது என்று	பயனற்றவை என்று (அவற்றை விட்டொழித்து)	இயம்பும்	அருளிச்செய்த
நண்ணினர் பால்	தம்மை ஆச்ரயித்தவர்கள் விஷயத்தில்	கலித்துறை அந்தாதி	கட்டளைக் கலித்துறையிலமைந்த அந்தாதியான இதனை
சயம் தரு கீர்த்தி	வெற்றியைத் தரும் பண்பினைக் கொடுக்கும் புகழுடையரான	ஓத	அநுஸந்திக்கைக்கு
இராமானுச முனி	எம்பெருமானாருடைய	இசை	ஒருப்பட்டிருக்கக் கடவை.

கருத்து:—விஷயாந்தரங்களின் அநுபவத்தினால் உண்டாகும் சிற்றின்பங்கள் யாவும் அற்பங்களென்றும் நிலையற்றவையென்றும் கருதி அவற்றை அவற்றின் ஸம்பந்தமும் தம்மையடையாது அடி பணிகின்ற மஹாத்மாக்களுக்கு வெற்றியை உண்டாக்குகின்ற அருளுடைமை பெருந்தன்மைத் தன்மையராய் இப்பெரும்புகழ் பரவப் பெற்றவரான எம்பெருமானார் விஷயமாக, மனத்திடனையும் பக்தி முதலிய மஹாகுணங்கள் நிறைந்த திருவரங்கத்தமுதனார் பரம பக்தி தலையெடுத்துச் சொன்ன அந்தாதி என்னும் இந்த ப்ரபந்தத்தை ஓதுவதற்கு நெஞ்சே! நீ இசைந்திடாய் என்றார்.

நயம் = விஷயாந்தரங்கள். "காரணமான நல்வினை நயம்" (முதல் திருவந்தாதி) என்ற இடத்து, நயம் என்பதற்கு விஷயாந்தரங்களென்று பொருள் அருளிச்செய்யப்பட்டிருத்தல் காண்க. பேரின்பம்—சிற்றின்ப மென்னவேண்டுமிடத்துப் பேரின்பமென்றது விபரீத லக்ஷணை.

சொல்லின் தொகைகொண்டு உனதடிப்போதுக்குத் தொண்டுசெய்யும்
நல்லன்பரேத்த உன்னாமமெல்லா மென்றன் நாவினுள்ளே
அல்லும் பகலு மமரும்படிநல் கறுசமயம்
வெல்லும்பரம இராமாநுச விதென் விண்ணப்பமே.

அறு சமயம்	அப்ராமாணிகங்களான ஆறு மதங்களையும்	ஏத்தும்	துதிக்கிற
வெல்லும் பரம இராமானுச	வென்றருளிய ஆசிரியரான எம்பெருமானாரே!	உன் நாமம் எல்லாம்	தேவரீருடைய திருநாமங்களெல்லாம்
உனது அடிப் போதுக்கு	தேவரீருடைய பாதாரவிந்தங்களிலே	என்றன் நாவினுள்ளே	எனது நாவிலே
தொண்டு செய்யும்	வாசிக கைங்கர்யம் பண்ணுகிற	அல்லும் பகலும்	அஹோராத்ரமும்
நல் அன்பர்	பரமபக்தர்கள்	அமரும்படி	பொருந்தியிருக்கும்படி
சொல்லின் தொகை கொண்டு	சப்த ராசிகளைக் கொண்டு	நல்கு	கிருபைசெய்தருள வேணும்;
		இது என் விண்ணப்பம்	இவ்வளவே அடியேன் செய்யும் விஜ்ஞாபனம்.

[இம்மூன்று தனியன்களே ஸகல திவ்ய தேசங்களிலும் வழங்குமவை; மற்றொரு தனியன் மேனாட்டில் அநுஸந்திக்கப் படுகிறதாம்; அதாவது.]

இனியென் குறைநமக் கெம்பெருமானார் திருநாமத்தால்
முனிதந்த நூற்றெட்டுச் சாவித்திரியென்னு நுண்பொருளைக்
கனிதந்த செஞ்சொற் கலித்துறையந்தாதி பாடித்தந்தான்
புனிதன் திருவரங்கத் தமுதாகிய புண்ணியனே.

(இதன் கருத்து :-) ஸர்வேச்வரன் ஆதியிலே ஸங்கல்பபூர்வகமாக உலகத்தைப் படைத்து முதலிலே சதுர்முகப்ரஹ்மாவுக்கு ஸாவித்ரியை உபதேசித்தான். இவ்வமுதனார் அந்த ஸாவித்ரியின் ஸாரார்த்தத்தை யெடுத்து இராமாநுசன் என்னும் திருநாமத்தோடிணைத்துக் கட்டளைக் கலித்துறையிலே வைத்துத் தாம் அநுபவித்த அநுபவத்தின் பரீவாஹரூபமாக இந்நூற்றந்தாதியைப் பாடிப் பின்புள்ளாரான நமக்கும் உபகரித்தருளினார். இனி நமக்கு ஜ்ஞாநாநுஷ்டாநங்களில் ஒரு குறையுமில்லை என்பதாம். "திருநாமத்தால்" என்றவிடத்து, திருப்பெயரால் என்று பாடமிருப்பின் வெண்டளைக்குச் சேரும்.

தனியன் உரை முற்றிற்று.

இராமாநுச நூற்றந்தாதி

உரையின் அவதாரிகை.

ஸகல சாஸ்த்ரங்களுக்கும் ஸங்க்ரஹம் திருவஷ்டாக்ஷரம். அதனுடைய பரம தாத்பர்யமாயும், ஆழ்வார்களுடைய திவ்ய ப்ரபந்தங்களின் ஸாரார்த்தமாயும், ஸ்ரீமதுரகவிகளுடைய உக்தியாலும் அநுஷ்டாநத்தாலும் ப்ரகாசிதமாயும், நம் பூர்வாசார்யர்களின் உபதேச பரம்பரையாலே ப்ராப்தமாயும், சேதநர்களனைவர்க்கும் இன்றியமையாத ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களின் நிஷ்க்ருஷ்ட வேஷமாயும், பரம ரஹஸ்யார்த்தமாயு மிருப்பது சரமபர்வ நிஷ்டை. அந்நிஷ்டையிருக்கும்படியைத் திருவரங்கத்தமுதனார்க்கு எம்பெருமானார் தமது நிர்ஹேதுக க்ருபையாலே கூரத்தாழ்வான் திருவடிகளிலே இவரை ஆச்ரயிப்பித்தருளி இவர் முகமாக உபதேசித்தருளினார். அங்ஙனம் உபதேச ப்ராப்தமான அந்தச் சீரிய பொருளை இவ்வமுதனார் தாம் அநவரத பாவனை பண்ணி எம்பெருமானார் திருவடிகளை இடைவிடாது சேவித்துக்கொண்டு போந்தாராய் அவருடைய திருக்கல்யாண குணங்களைத் தமது பக்திப் பெருங்காதலுக்குப் போக்குவீடாகப் பேசி அநுபவித்தே தீரவேண்டும்படியான நிர்ப்பந்தம் தமக்கு உண்டானமையாலும், சரமபர்வநிஷ்டையே சீரியதென்கிற பரமார்த்தத்தைச் சேதனர்கட்கு எளிதில் உணர்த்த வேணுமென்கிற க்ருபாமூலமான கருத்தினாலும் தாம் எம்பெருமானாருடைய திவ்யகுண சேஷ்டிதாதிகளை ப்ரேமத்துக்குத் தகுதியாகப் பேசுகிற பாசுரங்களாலே அவருடைய வைபவத்தை அனைவர்க்கும் வெளியிடா நின்றுகொண்டு முன்பு ஆழ்வார் திருவடிகளுக்கே அற்றுத்தீர்ந்த மதுரகவிகள் தமது நிஷ்டையைக் கூறும் முகத்தாலும் பிறர்க்கு உபதேசிக்கும் முகத்தாலும் உஜ்ஜீவநத்துக்கு உபயுக்தமான அர்த்தத்தை லோகத்திலே வெளியிட்டருளினதுபோல, இவர்

தாமும் அவ்வகைகளாகவே ஆசார்யாபிமாநநிஷ்டர்க்கு அறிந்துகொள்ளத்தக்க அர்த்தங்களை யெல்லாம் மிக்க சுருக்கமும் மிக்க விரிவுமின்றி நூற்றெட்டுப் பாசுரங்கள்கொண்ட இத்திவ்ய ப்ரபந்த முகத்தால் அருளிச்செய்கிறார். ... . ✽

பூமன்னுமாது பொருந்திய மார்பன் * புகழ்மலிந்த
பாமன்னுமாற னடிபணிந் துய்ந்தவன் * பல்கலையோர்
தாம்மன்ன வந்த விராமாநுசன் சரணாரவிந்தம்
நாம்மன்னிவாழ * நெஞ்சே சொல்லுவோமவன் நாமங்களே. (க)

நெஞ்சே!	ஓ மனமே!
பூ மன்னு மாது	தாமரைப்பூவில் பொருந்த முடையவளா யிருந்த பிராட்டி
பொருந்திய மார்பன்	(அப்பூவை விட்டு வந்து) பொருந்துவதற்குப் பாங்கா யிருக்கை யுடைய திருமார்பை யுடையனான பெருமா னுடைய
புகழ் மலிந்த பா	திருக்கல்யாண குணங் கள் நிறைந்த தமிழ்ப் பாசுரங்களையுடைய
மன்னு மாறன்	ஸ்திரமாயுள்ளவரான நம்மாழ்வாருடைய
அடி	திருவடிகளை
பணிந்து	ஆச்ரயித்து
உய்ந்தவன்	உஜ்ஜீவித்தவரும்
பல் கலையோர் தாம் மன்ன வந்த	பலபல சாஸ்த்ரங்களை யறிந்த மஹான்கள் நிலைபெறும்படி (இவ் வுலகில்) அவதரித்த வருமான
இராமாநுசன் சரண அரவிந்தம்	எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை
நாம் மன்னி வாழ	நாம் ஆச்ரயித்து வாழ் வதற்குறுப்பாக
அவன் நாமங்களே	அவ்வெம்பெருமானாருடைய திருநாமங்களையே
சொல்லுவோம்	அநுஸந்தானம் பண்ணு வோம்.

***:—தாமரைமலரிற் பிறந்த பெரிய பிராட்டியார் அப்பூவைவிட்டு "அகலகில்லேன் இறையும்" என்று மிக்க விருப்பத்துடன் வசிக்கப்பெற்ற திருமார்பை யுடையனான திருமாலினுடைய திவ்ய குணசேஷ்டிதங்களை நிறைத்துக்கொண்டிருக்கிற திருவாய்மொழி முதலான திவ்யப்ரபந்தங்களை அருளிச்செய்த நம்மாழ்வாருடைய திருவடிகளைத் தொழுது வாழ்வைப் பெற்றவராயும், பலபல சாஸ்த்ரங்களைக் கற்றும் உஜ்ஜீவநோபாயத்தில் த்ருடாத்யவஸாயமின்றியே வாழ்விபரீதங்களைக்கொண்டு கலங்காநின்றவர்களை ஒரு நிச்சயஜ்ஞானத்திலே நிலைநிறுத்தி வாழ்விக்கைக் கவதரித்தவராயுமிருக்கிற எம்பெருமானாருடைய திருவடிகளை நாம் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு அவருடைய திருநாமங்களை வாயாரப் பேசுவோமென்று தமது திருவுள்ளத்தை நோக்கிச் சொல்லுகிறாராயிற்று.

பல்கலையோர் தாம்மன்ன = பலபல சாஸ்த்ரங்களைக் கற்று வல்லவர்களான ஆழ்வான் ஆண்டான் எம்பார் முதலிய மஹான்கள் ப்ரதிஷ்டிதர்களாகைக்காக என்றபடி. எம்பெருமானாருடைய சரணாரவிந்த ப்ராப்திக்கு ஸாதநம் = அவருடைய திருநாமஸங்கீர்த்தநமேயாம் என்பது இப் பாசுரத்தில் வெளியாயிற்று. ... (க)

கள்ளார்பொழில் தென்னரங்கன் * கமலப்பதங்கள் நெஞ்சில்
கொள்ளாமனிசரை நீங்கி * குறையல் பிரானடிக்கீழ்
விள்ளாதவன்ப னிராமாநுசன் மிக்க சீலமல்லால்
உள்ளாதென்னெஞ்சு * ஒன்றறியே னெனக்குற்ற பேரியல்வே. (உ)

கள் ஆர் பொழில் தென் அரங்கன்	[illegible]	இராமாநுசன்	[illegible]
கமலப் பதங்கள்	[illegible]	மிக்க சீலம் அல்லால்	[illegible]
நெஞ்சில் கொள்ளா	[illegible]	உள்ளாது	[illegible]
மனிசரை நீங்கி	[illegible]	என் நெஞ்சு	[illegible]
		(இவ்வாறு)	
குறையல் பிரான் அடிக் கீழ் விள்ளாத அன்பன்	[illegible]	எனக்கு உற்ற பேர் இயல்வு	[illegible]
		ஒன்று அறியேன்	[illegible]

[illegible] (௨)

பேரியல்நெஞ்சே அடிபணிந்தேன் உன்னை * பேய்ப்பிறவிப்
பூரியரோடுள்ள சுற்றம் புணர்த்த * பொருவருசீர்
ஆரியன் செம்மை இராமாநுசமுனிக்கு அன்புசெய்யும்
சீரியபேறுடையார் * அடிக்கீழ் என்னைச் சேர்த்ததற்கே. (௩)

பேர் இயல் நெஞ்சே!	[illegible]	செம்மை	[illegible]
உன்னை அடி பணிந்தேன்	[illegible]	இராமாநுச முனிக்கு	[illegible]
பேய்ப் பிறவி	[illegible]	அன்பு செய்யும் சீரிய பேறுடையார்	[illegible]
பூரியரோடு உள்ள	[illegible]	அடிக்கீழ்	[illegible]
சுற்றம்	[illegible]	என்னை	[illegible]
புணர்த்த	[illegible]		
பொருவு அரு சீர்	[illegible]	சேர்த்ததற்கே	[illegible]
ஆரியன்	[illegible]		

[illegible]

"நின்பன்னலம் கைப்பற்றுவீரோ" என்றுவிடாமல் உண்டு நீ நிலையில் வைக்குமாறு நமக்கு செய்வது காப்பது என செய்யவேண்டும் என்றவாறிதன்; ஸ்ரீபாஷ்யம்-இத்தியாதிகள்; பலிந்தாரின்-உபகாரகர்கள் ; அதாவது பொலிவுடையர். பொருள்-ஒப்பு.

"இராமாநுசனையும் கண்டுகொண்டேன் இனிய பெருமையுடையார்" என்றபிடித்து ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய பெருமையையும் விளக்குகின்றார் என்றதும், உட்கொண்டுவாரின் பிரசித்தமும் தருகின்று சொன்னதும் ஒன்றும். ... ... (௩)

என்னைப் புவியில் ஒரு பொருளாக்கி * மருள் சுரந்த
முன்னைப் பழவினை வேரறுத்து * ஊழி முதல்வனையே
பன்னப் பணித்த இராமாநுசன் பரன் பாதமும் என்
சென்னித் தரிக்க வைத்தான் * எனக்கேதும் சிதைவில்லையே. (௪)

ஊழி முதல்வனையே	எல்லாப் பொருள்களையும் படைத்தளிக்கும் காரண பூதனான எம்பெருமானையே	மருள் சுரந்த முன்னைப் பழவினை வேர் அறுத்து	அஞ்ஞானத்தை உண்டாக்குமவையும் அநாதியானவையுமான (என்னுடைய) பாவங்களை வேரறுத்து
பன்ன	(எல்லாரும் கீர்த்திக்க) அநுசந்திக்கும்படி	பாதமும் என் சென்னி	தமது திருவடிகளையும் என் தலையிலே
பணித்த	(ஸ்ரீபாஷ்ய முதலிய நூல்களால்) அருளிச்செய்த		யான் உய்ந்து தரிக்கும்படியாக வைத்தருளினார் (இனியொரு குறைபாடுமில்லை)
பரன் இராமாநுசன்	எல்லோரிலும் உயர்ந்தவரான எம்பெருமானார்	தரிக்க வைத்தான்	
புவியில்	இந்தப் பூமியிலே	எனக்கு	அடியேனுக்கு
என்னை ஒரு பொருள் ஆக்கி	(அப்ரயோஜகனான) என்னை ஒரு பதார்த்தமாக்கி	ஏதும் சிதைவு இல்லை	எவ்வித மனக்குறையும் இனி உண்டாக இடமில்லை.

ப. உ:—எம்பெருமானாருடைய கீர்த்தியை விசுவாசத்தின்று அநாதியாய் இனி ஒரு வரும் சம்பந்தமான துர்வினையும் அடையாமல் என்னைப் பதார்த்தமாக்கி சேர்ப்பது முன்னமிருந்த எனது அருமையானபெருமைய் சொற கிலி, தமது பாதாரவிந்தங்களையும் என் தலையிலே வைத்தருளினார் எம்பெருமானார்; இப்படி பெற்ற எனக்கு இனி ஒரு குறைபாடில்லை என்றவாறு.

மருள் சுரந்த—அஞ்ஞானத்தாலே செய்யப்பட்ட என்னை, மறுமையிலே காக்கப்பட்ட என்றவாறு. [ஊழிமுதல்வனையே பன்னப்பணித்த] ஊழிமுதல்வனான எம்பெருமானையே ப்ரதிபாத்யனாகிய தம்மைச் சொல்லுமின—என்று அர்த்தமாய், பண்ணிருமாவ விருத்தமாகிய வெவ்வால் உபநிஷத் முதலியவை மனதில் பொருளாயிருக்க, சொல்லுமிடத்தும் என்று பெயரும் படையாகச் சொன்னபடி. ஊழிமுதல்வன்—பிரளயகாலத்தில் முதலாகத் தலைவனாயிருக்குமவன் என்றபடி. (௪)

எனக்குற்ற செல்வம் இராமாநுசனென்று * இசையகில்லா
மனக்குற்றமாந்தர் பழிக்கில் புகழ் * அவன் மன்னியசீர்
தனக்குற்ற அன்பர் அவன் திருநாமங்கள் சாற்றும் என் பா
இனக்குற்றம் காணகில்லார் * பத்தியேய்ந்த இயல்விதென்றே. (௫)

எனக்கு உற்ற செல்வம் இராமாநுசன் என்று — { 'எனக்கு ப்ராப்தமான ஸம்பத்து எம்பெருமானாரே' என்று
இசைய கில்லா — { அத்யவஸாயம் பண்ணமாட்டாத
மனக்குற்றம் மாந்தர் — { அசத்புருஷர்களான மனிசர்
பழிக்கில் — { (இந்நூலைப்) பழிப்பார்களாகில்
புகழ் — { (அன்னவர்களுடைய பழிப்பே (இதற்குப்) புகழாய்விடும்;
அவன் — { அவ்வெம்பெருமானாருடைய
மன்னிய சீர் தனக்கு — { நித்யஸித்தமான கல்யாணகுணங்களுக்கு
உற்ற — தகுதியான
அன்பர் — { அன்புடையவர்களான மஹான்கள்
பத்தி ஏய்ந்த இயல்வு இது என்று — { இந்நூலை பக்தியோடு கூடின ப்ரபந்தத்தின் இயல்புடையதென்று (திருவுள்ளம் பற்றி)
அவன் திருநாமங்கள் சாற்றும் என் பா இனம் குற்றங்காண கில்லார் — { அவ்வெம்பெருமானாருடைய திருநாமங்களைச் சொல்லுகின்ற என்னுடைய (இக்கவி) பாசுரங்களிலுள்ள குற்றங்களைக் காணமாட்டார்கள்.

* * *:—உலகத்தில் ஒரு ப்ரபந்தம் பிறந்தால் அதனைத் தூஷிப்பார் பலரும், பூஷிப்பார் சிலரும் ஏற்படுவது வழக்கம். உண்மையில் தோஷங்கள் இல்லாதிருந்தாலும் ஏதாவது சொல்லித் தூஷித்தே தீருவர்கள்; குற்றம் குறைகள் இருந்துவிட்டால் தூஷகர்களின் உத்ஸாஹம் கேட்கவே வேண்டியதில்லை. அறிவிலியான நான் இயற்றும் இந்நூலில் தோஷங்கள்தான் மிகையாக இருக்கக்கூடும்; அவற்றைக்கண்டு சிலர் நிந்திப்பார்களாகில், அன்னவர்களுடைய தூஷணம் நமக்கு பூஷணமேயாம் [illegible] என்கிறார்.

'இவர்களுடைய பழிப்பு நமக்கு அப்ரயோஜகம்' என்று சொல்லவேண்டியிருக்க, அவர்களுடைய பழிப்புத்தானே நமக்குப் புகழாம் என்கைக்குக் கருத்தென்? அவர்களது பழிப்பு இவர்க்கு எப்படி புகழாய் விடும்? என்று சிலர் சங்கிக்கக்கூடும். அவர்கள் தெளியுமாறு சொல்லுகிறோம்;—அமுதனாராம் ஒருவர்; அவர் இராமாநுச நூற்றந்தாதி என்னும் ஒரு ப்ரபந்தம் பாடினாராம்; அதில் ஒவ்வொரு பாட்டிலும் இராமாநுசன் என்று சொல்லுவதையே தொழிலாகக் கொண்டிருக்கிறார். கவிகளுக்கு, சான்றோர்களால் [illegible] சொல்லப்பட்டுள்ள லக்ஷணம் முதலானவற்றை இழந்துரைக்கிறார்; பல புருஷார்த்தங்களும் தமக்கு 'உடையவர்' தாமாம்; எம்பெருமானைக்கூட அவர் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டாராம். என்றிவைபோல்வன சில வார்த்தைகளைச் சொல்லிப் பழிப்பார்கள். வாஸ்தவத்தில் இவையெல்லாம் குணமேயாதலால் குணகீர்த்தனத்தில் சேர்ந்து புகழ்ச்சியேயாய்முடியக் குறையில்லையன்றோ. எம்பெருமானைப் பழித்த சிசுபாலாதிகளும் பர்யாயேண குணகீர்த்தனம் பண்ணினார்களாகவன்றோ சொல்லப் போவது. (௫)

இயலும்பொருளு மிசையத் தொடுத்து * ஈன்கவிகளன்பால்
மயல்கொண்டு வாழ்த்து மிராமாநுசனை * மதியின்மையால்
பயிலுங்கவிகளில் பத்தியில்லாத வென் பாவிநெஞ்சால்
முயல்கின்றனன் * அவன்றன் பெருங்கீர்த்தி மொழிந்திடவே. (௬)

ஈன் கவிகள் — விலக்ஷணரான கவிகள்
அன்பால் — ப்ரீதியினாலே
இயலும் பொருளும் — சப்தமும் அர்த்தமும்
இசைய — { நன்கு பொருந்தும்படியாக
தொடுத்து — அமைப்பர்கள்
மயல் கொண்டு — { வ்யாமோஹம் [illegible] பெற்று
வாழ்த்தும் இராமாநுசனை பயிலும் — { அபிநந்திக்கும்படி நின்ற எம்பெருமானாரை பழகுகின்ற

கவிகளில்	பாடல்களிலே	பெரு கீர்த்தி	அளவற்ற கீர்த்தியை
பத்தி இல்லாத	பக்தியற்றதான	மொழிந்திட	பேசுவதாக
என் பாவி நெஞ்சால்	என்னுடைய பாபிஷ்டமான நெஞ்சினாலே	மதி இன்மையால் முயல் கின்றனன்.	புத்தியில்லாமையினாலே ப்ரயத்னிக்கின்றேன்.
அவன் தன்	அவ்வெம்பெருமானாருடைய		

— "பத்தியெய்த்த வியாக்கியைதன்றே" என்று கீழ்ப்பாட்டில் சொன்னவிவர், அப்படிப்பட்ட பக்தி தமக்கு உண்டோவென்று பார்த்தார்; 'அந்தோ! யானோ அவ்வெம்பெருமானாரைத் துதிக்க இழிந்தது!' என்று தம்மைத்தாமே வெறுத்துக் கொள்ளுகிறார் இதில்.— இன்கவி பாடும் பரமகவிகளான சில மஹான்கள் சொல்லின்பமும் பொருளின்பமும் நன்கு பொருந்தும்படி கவி பண்ணி ஆதரமான அன்போடே ஸ்வாமியைத் துதித்து இராமாநுஜனை வாழ்த் தாநிற்பர்கள்; அன்னவர்களுடைய பக்திபரீவாஹ ரூபமான கவிகளில் ஆதரமற்ற என்னுடைய பாவி நெஞ்சால் அவ்விராமாநுசனுடைய பெருமைபொருந்திய புகழ்களையெல்லாம் பேசுவதாக நான் முயல்கின்றேனே! இதென்ன புத்திகெட்ட தன்மை! என்று வெறுத்துக்கொள்ளுகிறார்.

(௬)

மொழியைக்கடக்கும் பெரும்புகழான் * வஞ்சமுக் குறும்பாம்
குழியைக்கடக்கும் நம் கூரத்தாழ்வான் சரண்கூடியபின் *
பழியைக்கடத்தும் இராமாநுசன் புகழ்பாடி அல்லா
வழியைக்கடத்தல் * எனக்கினி யாதும் வருத்தமன்றே. (௭)

மொழியை கடக்கும்	வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி வாசாமகோசரமான	கூடியபின்	நான் ஆச்ரயித்த பின்பு
பெரு புகழான்	பெரிய புகழுடையவரும்	பழியை கடத்தும்	ஸர்வபாப நிவர்த்தகரான
மூன்று குறும்பு ஆம் வஞ்சக் குழியை கடக்கும்	கல்விச்செருக்கு, செல்வச் செருக்கு, குலச் செருக்கு என்னும் மூவகைக் குறும்புகளாகிற படுகுழியைக் கடந்திருப்பவரும்	இராமாநுசன்	எம்பெருமானாருடைய
		புகழ் பாடி	திருக்குணங்களைப் பாடி
		அல்லா வழியை கடத்தல்	ஸ்வரூபத்திற்குச் சேராத நீசவழிகளைத் தப்பிப் பிழைத்திருப்பது
		எனக்கு	அடியேனுக்கு
		இனி	இனிமேலுள்ள காலமெல்லாம்
நம் கூரத்து ஆழ்வான் சரண்	நமக்கு நாதருமான கூரத்தாழ்வானுடைய திருவடிகளை	யாதும் வருத்தம் அன்று	கொஞ்சமும் ப்ரயாஸ ஸாத்யமன்று; [எளிதேயாம்]

— எம்பெருமானாரைத் துதிப்பதற்கு நாம் யோக்யதையற்றவர் என்று பின்வாங்கப் பார்த்த அமுதனார், தமக்குள்ள ஆழ்வான் திருவடி ஸம்பந்தத்தை நினைந்து இது இருக்கும்போது எனக்கு அசக்யமானது ஒன்றுமில்லையென்று துணிவு கொள்ளுகிறார் இதில். வாய்கொண்டு வருணிக்கமுடியாத பெரும் புகழ் படைத்தவரும், கல்வி, செல்வம், குலம் என்ற மூன்றுவகை மதங்களும் புகுதலொழிந்தவருமான கூரத்தாழ்வானுடைய சரணாரவிந்தங்களை ஆச்ரயித்து உஜ்ஜீவித்த எனக்கு எம்பெருமானாருடைய திருக்குணங்களைப் பாடுவதும் அதுவே காரணமாக அர்ச்சிராதிகதி ஒழிந்த மற்ற கதிகளிற் போகாமல் அவ்வழியே போவதும் மிகவும் எளிதேயாம் என்றாயிற்று.

கம் பூருஷகாரமின்றிக்கே எவ்வளவோ சிறந்த புருஷகாரமாயிருக்கும் ஆழ்வானுடைய புகழ் அத்யந்த விலக்ஷணமென்பது ப்ரஸித்தமான விஷயம். ஒரு காலத்திலே நாலூரானுக்குங் கொடிய நரகங்களைக் கொடுக்க வேணுமென்று பலரும் எதிர்பார்த்திருக்கப் ப்ரார்த்திக்க வேண்டியிருக்க, பேரருளாளன் திருமுன்பே யாவரும் வியக்கும்படி விண்ணப்பஞ்செய்து கண் தெரியும்படி வரம் வேண்டிக்கொள்ளச் சொன்ன ஸ்வாசார்ய நியமனத்தையும் அதிக்ரமித்து "நான் பெற்ற பேறு நாலூரானும் பெறவேணும்" என்று வரம் வேண்டிக்கொண்டபடி விசாலமான திருவுள்ளம்பெற்ற ஆழ்வானுடைய புகழை வாய் கொண்டு சொல்லவொண்ணுமோ! "பொறுமையைக் கடக்கும் பெரும்பொறையான்" என்று சொன்னது அவர் போது மாத்ரமேயிருக்கையாலும்.

[வஞ்சமுக்குறும்பாம் இத்யாதி.] கல்விச்செருக்கு, செல்வச்செருக்கு, குலச் செருக்கு என்ற இம்மூன்று அஹங்காரங்கள் மிகக்கொடியவை; இவற்றைக் கடத்தல் ஆர்க்கும் அரிது; இவற்றைக் கடந்தவர் என்னும் ஏற்றம் ஆழ்வானொருவர்க்கே அஸாதாரணமென்பது எம்பெருமானார் காலத்திலேயே ப்ரஸித்தமாயிற்று. திருவாய்மொழியில் "பலரடியார் முன்பருளிய பாம்பணையப்பன்" என்றவிடத்து ஈடு முப்பத்தாறாயிரத்தில் ஆழ்வான் விஷயமாக அருளிச்செய்யப்பட்டதொரு ஐதிஹ்யம் குறிக்கொள்ளத்தக்கது. மற்றும்பல இதிஹாஸங்களும் பன்னியுரைக்குங்கால் பாரதமாம். ... ... (எ)

வருத்தும் புறவிருள்மாற்ற * எம்பொய்கைப்பிரான் மறையின்
குருத்தின் பொருளையும் செந்தமிழ்தன்னையுங்கூட்டி * ஒன்றத்
திரித்தன் றெரித்த திருவிளக்கைத் தன்திருவுள்ளத்தே
யிருத்தும் பரமன் * இராமாநுசனெம் மிறையவனே. (அ)

வருத்தும்	வருத்தத்தை உண்டுபண்ணக்கூடிய
புறம் இருள்	பாஹ்ய விஷயங்களைப் பற்றின அஜ்ஞானமாகிற இருளை
மாற்ற	போக்குவதற்காக
எம் பொய்கைப்பிரான்	எமது குலத்தலைவரான பொய்கையாழ்வார்
அன்று	முற்காலத்தில்
மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி ஒன்றத் திரித்து	வேதாந்தங்களிற் பதிந்து கிடக்கும் பொருள்களையும் செந்தமிழ்ச் சொற்களையும் கூட்டி இரண்டையும் ஒன்று சேர ஒரு திரியாக்கி
எரித்த திருவிளக்கை	(முதல் திருவந்தாதியாகிற) திருவிளக்கை
தன் திருவுள்ளத்தே இருத்தும்	தமது திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டிருக்கின்ற
பரமன் இராமாநுசன்	மஹாநுபாவரான எம்பெருமானார்
எம் இறையவன்	நமக்கு ஸ்வாமி.

* * *:—பகவத்பாகவத விஷயம் அந்தரங்க விஷயமென்றும், மற்றுமுள்ள விஷயங்கள் பாஹ்ய விஷயம் (அதாவது—புறவிஷயம்) என்றும் சொல்லப்படும். அந்த பாஹ்ய விஷயங்களைப்பற்றின அஜ்ஞானத்தைச் சொன்னது புறவிருள் என்பதால்; [புறம்பான விஷயங்களைப்பற்றின இருள் புறவிருள்] அவ்விருளானது ஞானிகள் வாசிப்பதுபோல் தோற்றினாலும் மிக்க வருத்தத்தை விளைக்கக்கூடியது; அப்படிப்பட்ட கொடிய இருளை அகற்றுவதற்காகப் பொய்கையாழ்வார் "வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக" என்று

தொடங்கித் திருவந்தாதி திவ்ய ப்ரபந்தமென்னும் ஒரு விளக்கை ஏற்றியருளினார். அவ்விளக்குக்கு ஒரு திரியாக நிரியாகின்றார் என்றால், வேதாந்தங்களில் இரண்டு விடங்களும் ஸாரப்பொருள் களையும் இனிய தமிழ்ச்சொற்களையும் ஒன்ற சேர்த்துத் திரித்தார். அப்படிப்பட்ட திருவிளக்கை எம்பெருமானார் தமது திருவுள்ளத்திலேயே எப்போதும் அணையாதபடி ஏற்றித் தாங்கினார்; அவரே அடியேனுக்கு ஸ்வாமி என்றாயிற்று. (௮)

இறைவனைக் காணும் இதயத் திருள்கெட * ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடி தாள்கள் * நெஞ்சத்து
உறையவைத்தாளு மிராமாநுசன் புகழோதும் நல்லோர்
மறையினைக்காத்து * இந்தமண்ணகத்தே மன்ன வைப்பவரே. (௯)

இறையவனை	ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை	ஞானம் என்னும் நிறைவிளக்கு ஏற்றிய	ஞானமயமான பூர்ணதீபத்தை ப்ரகாசிப்பித்தருளி இரண்டாம் திருவந்தாதியை அருளிச்செய்த		
காணும்	ஸாக்ஷாத்கரிப்பதற்கு உபகரணமான				
இதயத்து	ஹ்ருதயத்திலுள்ள				
இருள்	அஜ்ஞானமாகிய அந்தகாரமானது	பூதத் திருவடி தாள்கள்	பூதத்தாழ்வாருடைய திருவடிகளை		
கெட	கழிக்கும்படியாக	நெஞ்சத்து	தமது திருவுள்ளத்திலே		
உறைய வைத்து	ஶாஶ்வதமாக ஸ்தாபித்து	நல்லோர்	விலக்ஷண புருஷர்கள்		
ஆளும்	(அவற்றையே) அநுபவிக்கின்ற	இந்த மண் அகத்தே	இப் பூமண்டலத்திலே		
இராமாநுசன் புகழ்	எம்பெருமானாருடைய திவ்ய குணங்களை	மறையினை காத்து	வேதங்களை ரக்ஷித்து		
ஓதும்	இடைவிடாது அநுஸந்திக்கின்ற	மன்ன வைப்பவர்	என்றைக்கும் அழிவில்லாதபடி ப்ரதிஷ்டாபனம் பண்ணவல்லவர்கள்.		

* * *:— 'ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்' என்னும் விருது இராமாநுசனுடையார்க்கே ஏற்குமென்கிறார்.— ஸர்வ ஸ்வாமியான எம்பெருமானை ஸாக்ஷாத்கரிப்பதற்கு எல்லார்க்கும் உபகரணமாயிருக்கின்ற ஹ்ருதயமானது அஜ்ஞாநாந்தகாரத்தாலே இருண்டு கெட்டுப்போனதை யடி பரஜ்ஞானமென்கிற பூர்ணதீபத்தை ஏற்றினவரான பூதத்தாழ்வாருடைய திருவடிகளைத் தமது திருவுள்ளத்திலே இடைவிடாது வைத்துக்கொண்டு அவற்றையே அநுபவிக்கும் எம்பெருமானாருடைய குணங்களைத் தவிர வேறொன்றை வாய்கொண்டு பேசாதவர்களா யிருக்கும் விலக்ஷணர் யாரோ அவர்கள், தாம் வேதத்தை ஸ்வரூப ஸஹிதமாக இவ்வுலகத்தில் நிலைநிறுத்த வல்லவர்கள் என்றாயிற்று. பூதத்தாழ்வார் ஏற்றிய ஞானமென்னும் நிறைவிளக்காவது—இரண்டாம் திருவந்தாதியாகிற அவருடைய அருளிச்செயல். பூதத்திருவடி = திருவடியென்பது இங்கே ஸ்வாமிக்கு வாசகம்; பூதத்தாழ்வாரென்னும் ஸ்வாமி என்றபடி.

[மறையினைக் காத்து மன்னவைப்பவர்] எம்பெருமானார் ஸம்பந்தம் பெறாத மற்றையோர்கள் "வேதம் ப்ரமாணமேயல்ல" என்று சொல்லுமவர்களும், அதனைப் ப்ரமாணமாக ஒப்புக்கொண்டு அபார்த்தங்கள் பண்ணுமவர்களுமாய் இருப்பதால் அவர்கள் யாவரும் வேதமார்க்க விரோதிகள்; இராமாநுசனுடையார் தாம் ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்கள் என்றபடி. (௯)

மன்னியபேரிருள் மாண்டபின் * கோவலுள் மாமலராள்
தன்னொடுமாயனைக் கண்டமை காட்டும் * தமிழ்த் தலைவன்

பொன்னடி போற்று மிராமாநுசற் கன்பு பூண்டவர்தாள்
சென்னியிற் சூடும் * திருவுடையா ரென்றுஞ் சீரியரே. (௧௦)

மன்னிய	ஒருவராலும் போக்கமுடியாதபடி நிலைத்து நின்ற
பேர் இருள்	(அஜ்ஞானமாகிற) பெருத்த இருளானது
மாண்ட பின்	(முதல் ஆழ்வார்களிருவரும் ஏற்றின திருவிளக்காலே) அன்றுநீங்கின பின்பு,
கோவலுள் ஆயனை	திருக்கோவலூரில் ஆயனை
மா மலராள் தன்னொடும் கண்டமை	பிராட்டியோடு கூட தாம் சேவித்த படியை
காட்டும்	("திருக்கண்டேன்" இத்யாதி ப்ரபந்த முகத்தாலே) வெளியிட்டருளின
தமிழ் தலைவன்	தமிழ்க்குத் தலைவரான பேயாழ்வாருடைய
பொன் அடி	அழகிய திருவடிகளை
போற்றும்	புகழுமவரான
இராமாநுசற்கு	எம்பெருமானார் திறத்தில்
அன்பு பூண்டவர்	பக்தியையுடையவர்களின்
தாள்	திருவடிகளை
சென்னியில் சூடும் திருவுடையார்	சிரஸா வஹிக்கையாகிற செல்வமுடையோரான்
என்றும் சீரியர்	எக்காலத்திலும் ஸ்ரீமான்கள்.

* * * பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் ஏற்றின இரண்டு திருவிளக்குகளாலும் இருள் நீங்கின, "திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்" என்று திருக்கோவலூராயனைப் பிராட்டியோடுகூட சேவிக்கப்பெற்றார் பேயாழ்வார். தாம் அப்படி சேவித்ததாக மூன்றாந்திருவந்தாதி முகத்தால் வெளியிட்டருளின அவ்வாழ்வாருடைய திருவடிகளைத் துதிக்குமவரான எம்பெருமானார் திறத்தில் பக்தியையுடையவர்கள் யாரோ, அவர்களுடைய திருவடிகளைச் சிரோபூஷணமாகக் கொள்ளுகிற அழியாச் செல்வமான இதனால் ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய திருவடியைச் சிரமேற்கொள்ளுமவர்கள் தாம் நித்திய ஸ்ரீமான்கள் என்றவாறாயிற்று.

இப்பாட்டில் பேயாழ்வார் "தமிழ்த்தலைவன்" என்று சிறப்பித்துக் கூறப்பட்டார். (௧௦)

சீரியநான்மறைச் செம்பொருள் * செந்தமிழா லளித்த
பாரியலும்புகழ்ப் பாண்பெருமாள் * சரணாம் பதுமத்
தாரியல்சென்னி யிராமாநுசன் றன்னைச் சார்ந்தவர்தம்
காரியவண்மை * என்னாற் சொல்லொணாதிக் கடலிடத்தே. (௧௧)

சீரிய நான் மறை செம் பொருள்	சிறந்த நால் வேதங்களினுடைய செவ்விய பொருள்களை
செம் தமிழால்	அழகிய தமிழ்ப் பாசுரங்களினால்
அளித்த	அருளிச்செய்தவரும்
சரண் ஆம் பதுமம் தார் இயல் சென்னி	திருவடிகளாகிற தாமரைப் பூவாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியையுடையவரான
இராமாநுசன் தன்னை	எம்பெருமானாரை
சார்ந்தவர் தம்	ஆச்ரயமாகப் பற்றினவர்களுடைய
பார் இயலும் புகழ்	பூமியெங்கும் பொருந்தின புகழையுடையவருமான
பாண் பெருமாள்	திருப்பாணாழ்வாருடைய
காரியம் வண்மை	அநுஷ்டான வைலக்ஷண்யமானது
இக்கடல் இடத்து	கடல்சூழ்ந்த இப்பூமியில்
என்னால் சொல்ல ஒணாது	(இப்படிப்பட்டது என்று) என்னால் சொல்லித் தலைக்கட்ட முடியாது.

* * *:—எம்பெருமானாருடைய ஸ்வரூப ரூபகுண விபூதிகளெல்லாம் விசதமாகப் பேசுகையாலே சிறந்ததாயான சாக்ஷாத்கரித்த வடிவிற் பொருந்தின கிடக்கும் நற்பொருள்களை "அமலனாதிபிரான்" என்னும் திவ்ய ப்ரபந்தத்தில் சுருக்கி அருளிச் செய்தவராய் நாடெங்கும் பரவின புகழையுடையவரான திருப்பாணாழ்வாருடைய சரணாரவிந்தங்களாலே அலங்கரிக்கப்பட்ட திருமுடியை யுடையவரான எம்பெருமானாரை அடிபணிந்தவருடைய ஆசாரங்களைக் கொண்டாடுபவனது என் வாய்கொண்டு வருணிக்க முடியாதபடி மிகவும் சிறந்தது என்றபடி. (கக)

இடங்கொண்ட கீர்த்தி மழிசைக்கிறைவன் * இணையடிப்போ
தடங்குமிதயத் திராமாநுசன் * அம்பொற்பாத மென்றுங்
கடங்கொண் டிறைஞ்சுந் திருமுனிவர்க்கன்றிக் காதல்செய்யாத்
திடங்கொண்ட ஞானியர்க்கே * அடியேனன்பு செய்வதுவே. (கஉ)

இடம் கொண்ட கீர்த்தி	பூமியெங்கும் வியாபித்த கீர்த்தியை யுடையரான	கடம் கொண்டு இறைஞ்சும் திரு	இதுவே கடமை என்கிற புத்தியோடே ஆச்ரயிக்கையாகிற செல்வத்தை யுடையரான
மழிசைக்கு இறைவன்	திருமழிசைப் பிரானுடைய		
இணை அடி போது	உபயபாதாரவிந்தங்கள்	முனிவர்க்கு அன்றி	மஹான்களுக்குத் தவிர மற்றவர்களுக்கு
அடங்கும்	குடிகொண்டிருக்கப் பெற்ற	காதல் செய்யா	அன்பு பூண்டிராத
இதயத்து	திருவுள்ளத்தை யுடையரான	திடம் கொண்ட ஞானியர்க்கே	மிக்க உறுதியை யுடையரான ஞானிகளுக்குத்தான்
இராமாநுசன்	எம்பெருமானாருடைய		
அம் பொன் பாதம்	மிகவும் அழகிய திருவடிகளை	அடியேன் அன்பு செய்வது	அடியேன் பக்தனாயிருப்பேன்.
என்றும்	எக்காலத்திலும்		

* * *:—உலகமெங்கும் பரவின புகழையுடையவரான திருமழிசைப்பிரானுடைய பாதாரவிந்தங்கள் அடங்கியிருக்கப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகளை ஸ்வரூப ப்ராப்தமென்கிற புத்தியோடே அனவரதம் ஆச்ரயிக்கின்ற மஹாபாகவதர்கட்குத் தவிர வேறொருவர்க்கும் விதேயப்படாத ஞானிகளுக்கே அடியேன் அன்பனாயிருப்பன் என்கிறார். இப்பாட்டால், 'ஸ்ரீபாகவத பக்த பக்த பக்தன் அடியேன்' என்றுரைத்தது.

கடங்கொண்டு = கடமையாகக்கொண்டு. ... ... (கஉ)

செய்யும் பசுந்துளவத் தொழின்மாலையும் * செந்தமிழிற்
பெய்யும் மறைத்தமிழ்மாலையும் * பேராத சீரரங்கத்
தையன் கழற்கணியும் பரன்றாளன்றி யாதரியா
மெய்யன் * இராமாநுசன் சரணேகதி வேறெனக்கே. (கங)

செய்யும்	(தொண்டரடிப் பொடியாழ்வாராகிற தம்மாலே) செய்யப்பட்டதாய்	பசும் துளவம்	பசுமை தங்கிய திருத்துழாய் மாலையும்
		தொழில்	வேலைப்பாடுகளை யுடைத்தான

மாலையும்	பூமாலைகளையும்	பரன்	தொண்டரடிப் பொடியாழ்வாராகிற பெரியவருடைய
செம் தமிழில்	அழகிய தமிழ்ப் பாஷையிலே		
பெய்யும் மறை	உண்டாக்கப் பட்டதாய் வேதரூபமான	தாள் அன்றி ஆதரியா	திருவடிகளைத் தவிர மற்றொன்றையும் விரும்பாத
தமிழ் மாலையும்	திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல் மாலைகளையும்	மெய்யன்	ஸத்யசீலரான
		இராமாநுசன்	எம்பெருமானாருடைய
		சரணே	திருவடிகளே
		எனக்கு	அடியேனுக்கு
பேராத சீர் அரங்கத்து ஐயன் கழற்கு அணியும்	நித்யஸித்தமான கல்யாண குணங்களையுடையரான ஸ்ரீரங்கநாதனுடைய திருவடிகளிலே சாத்தினவராகிற	வேறு கதி	விலக்ஷணமான ப்ராப்ய வஸ்துவாம்.

* * *:—தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளை யன்றி மற்றொன்றில் ஆதரம் அற்றிருக்கிற எம்பெருமானார் திருவடிகளே நமக்குச் சரணமென்கிறார் இதில்.

தொண்டரடிப்பொடியாழ்வார் ஸ்ரீ ரங்கநாதன் திருவடிகளில் இரண்டு மாலைகளைச்செய்து ஸமர்ப்பித்தனரென்று சாதுர்யமாகச் சொல்லுகிறார் அமுதனார். "துளபத்தொண்டாய தொல்சீர்த் தொண்டரடிப்பொடி" என்றும், "தொடையொத்த துளபமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி" என்றும் தாமே அருளிச்செய்தபடிக்குப் பொருந்தத் திருத்துழாய் மாலைகளையும், திருமாலை திருப்பள்ளியெழுச்சி யென்கிற திவ்ய ப்ரபந்தங்களாகிற சொல்மாலைகளையும் அரங்கத்தையன் கழல்களிலே ஸமர்ப்பித்தவரிறே தொண்டரடிப்பொடியாழ்வார்.

"துளபத்தொழில் மாலையும்" என்றும் சிலர் பாடங்கூறுவர்; துளபத்து—துளஸியினாலாகிய. எழில் மாலை—அழகிய மாலை என்றபடி. இப்பாடம் அழகியதேயாயினும் வியாக்யானத்தில் ஆதரிக்கப்பட்ட பாடமன்றாதலால் உபேக்ஷிக்கத் தக்கதென்க. (௧௩)

கதிக்குப்பதறி * வெங்கானமுங் கல்லுங் கடலுமெல்லாம்
கொதிக்கத் தவஞ்செய்யுங் கொள்கையற்றேன் * கொல்லி காவலன்சொல்
பதிக்குங்கலைக் கவிபாடும்பெரியவர் பாதங்களே
துதிக்கும்பரமன் * இராமாநுச னென்னைச் சோர்விலனே. (௧௪)

கொல்லி காவலன்	குலசேகரப் பெருமாளாலே அருளிச் செய்யப்பட்டதாய்	என்னை சோர்விலன்	என்னைவிட்டு நீங்குகிறாரில்லை; (ஆதலால்)
		கதிக்கு பதறி	ப்ராப்ய வஸ்துக்காக விரைந்து
சொல் பதிக்கும்	சாஸ்த்ரச் சொற்கள் அமையப் பெற்றதான	வெம் கானமும் கல்லும்	அத்யுஷ்ணமான காடுகளிலும் மலைகளிலும்
கலை கவி	ப்ரபந்தமான திருமொழிப் பாசுரங்களை	கடலும்	கடல்களிலும் (நின்றுகொண்டு)
பாடும் பெரியவர்	பாடுகின்ற பெரியாழ்வாருடைய	எல்லாம் கொதிக்க	எல்லா அவயவங்களும் கொதிக்கும்படியாக
பாதங்களே துதிக்கும்	திருவடிகளையே ஸ்தோத்ரம் செய்பவராய்	தவம் செய்யும் கொள்கை	தபஸ்ஸு பண்ணும் உபாயத்தை
பரமன்	உத்க்ருஷ்டரான		
இராமாநுசன்	எம்பெருமானார்	அற்றேன்	விட்டொழித்தேன்.

* * *:—எல்லா சாஸ்த்ரங்களின் ஸாரப்பொருள்களையும் திரட்டி ஸ்ரீ குலசேகரப்பெருமாள் அருளிச்செய்த பெருமாள் திருமொழியென்னும் திவ்யப்ரபந்தத்தை அநுஸந்திக்கின்ற பெரியவர்களது திருவடிகளையே போற்றும் இயல்பினரான எம்பெருமானார் வந்து தாமே என்னை ஸ்வீகரித்தாராதலால் இனி ஒருகாலும் அவர் அடியேனைக் கைவிடமாட்டார்; ஆனபின்பு எனக்கு ப்ராப்யம் வேறு ஒன்று இல்லாமையாலே, பர்வத ஸமுத்ர தீரங்களில் நின்று க்ரூரமாகச் செய்யும் தவங்களில் இனி எனக்கு அந்வயமில்லை யென்றருளிச்செய்கிறார்.

“எல்லாம் கொதிக்கத் தவஞ்செய்யும் கொள்கை” என்றதற்கு—இவனுடைய தவத்தின் கொடுமையைக் கண்டு காணவும் கல்லும் கட்டையும் பரிதபிக்கும்படியாக அந்தந்த ஸ்தலங்களிலே நின்று தபஸ்ஸைப்பண்ணும் வ்யாபாரம் என்று பொருள் கூறுவாருமுளர்.

சோர்வு இலன் = சிதிலன் என்றபடி. ... ... (கச)

சோராதகாதல் பெருஞ்சுழிப்பால் * தொல்லைமாலை யொன்றும்
பாராதவனைப் பல்லாண்டென்று காப்பிடும் * பான்மையன்தாள்
பேராத வுள்ளத் திராமாநுசன்றன் பிறங்கியசீர்
சாராமனிசரைச் சேரேன் * எனக்கென்ன தாழ்வினியே?. (கரு)

சோராத காதல் பெருஞ் சுழிப்பால்	ஒருகாலும் குறைவுபடாத ப்ரேமத்தின் பெருஞ் சுழிப் பெருக்கினாலே	தாள் பேராத உள்ளத்து	திருவடிகள் விட்டு மாறாத திருவுள்ளத்தை யுடையரான
தொல்லை மாலை ஒன்றும் பாராது	நித்யனான எம்பெருமான் படைத்த சிறப்பும் சிந்தியாமல்	இராமாநுசன் தன் பிறங்கிய சீர்	எம்பெருமானாருடைய மிக்க திருக்குணங்களை
		சாரா	தங்களுக்கு ஆஸ்ரயமாகக் கொள்ளாத
அவனை	அவ்வெம்பெருமானை நோக்கி	மனிசரை சேரேன்	மனுஷ்யர்களை பற்றமாட்டேன்
பல்லாண்டு என்று காப்பிடும் பான்மையன்	பல்லாண்டு பல்லாண்டென்று மங்களாசாஸனம் பண்ணுகையையே ஸ்வபாவமாக உடையரான பெரியாழ்வாருடைய	இனி	இப்படிப்பட்ட உறுதி பிறந்தபின்பு
		எனக்கு என்ன தாழ்வு	அடியேனுக்கு என்ன குறை?

* * *:—பாண்டியராஜனுடைய பண்டித ஸபையில் எழுந்தருளி “எம்பெருமானே பரதத்துவம்” என்று ஸ்தாபனம் செய்து கிழியறுத்துவிட்ட காலத்து, அப்பாண்டியன் தம்மை யானைமேலேற்றி ஊர்வலம் வருவிக்கையில் தம் வைபவத்தைக் காணவந்து ஆகாசத்திலே கருடாரூடனாய் நின்ற திருமாலைச் சேவித்து அப்பெருமானிடத்துள்ள பெருங்காதலாலே ஸர்வஜ்ஞரான தம்மையும் ஸர்வசக்தனான அவனையும் மறந்து, தம்மை ரக்ஷகராகவும் அவனை ரக்ஷ்யனாகவும் எண்ணி அவனுக்குப் “பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு” என்று தொடங்கி மங்களாசாஸனம் செய்தருளின பெரியாழ்வாருடைய திருவடிகளையே இடைவிடாது தியானிக்கின்ற எம்பெருமானாருடைய குணங்களைச் சிந்திக்கவில்லாத பாவிகளோடு ஸம்பந்தத்தையும் செய்யமாட்டேன்; இங்ஙனம் பிறந்தபின் இனி எனக்கு ஒரு குறையுமில்லை—என்கிறார்.

முன்னிரண்டடிகளிற் குறிக்கப்பட்டுள்ள வரலாற்றின் விரிவு பெரியாழ்வார் வைபவத்திற் காணத்தக்கது. (கரு)

தாழ்வொன்றில்லா மறைதாழ்ந்து * தலமுழுதுங் கலியே
ஆள்கின்றநாள் வந்தளித்தவன் காண்மின் * அரங்கர்மௌலி
சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்தவள் தொல்லருளால்
வாழ்கின்றவள்ளல் * இராமாநுச னென்னும் மாமுனியே. (கசு)

அரங்கர் மௌலி சூழ்கின்ற மாலையை	ஸ்ரீ ரங்கநாதனுடைய திருமுடியிலே சாத்தப்படுகின்ற பூமாலையை	தாழ்வு ஒன்று இல்லா மறை	ஒரு குறையுமில்லாதிருந்த வேதமானது
சூடிக் கொடுத்தவள்	தனது திருக்குழலிலே அணிந்து வாடின மாலையைக் கொடுத்தவளான ஆண்டாளுடைய	தாழ்ந்து	(குத்ருஷ்டிகளாலே) குறைவுபெற
		தலம் முழுதும்	பூமியெங்கும்
		கலியே ஆள்கின்ற நாள்	கலிபுருஷனே ஸாம்ராஜ்யம் பண்ணுகிற காலத்திலே
தொல் அருளால் வாழ்கின்ற வள்ளல்	அவ்வாண்டாளின் அருளால் வாழ்பவரும் உதாரருமான	வந்து	இவ்வுலகில் வந்தவதரித்து
இராமாநுசன் என்னும் மாமுனி	ஸ்ரீ ராமாநுஜ முனிவரானவர் (எம்பெருமானார் என்றபடி)	அளித்தவன் காண்மின்	(அந்த வேதத்தை உத்தரிப்பித்து உலகத்தை) ரக்ஷித்தருளினவர்.

* * *:—ப்ரமாணங்களிற் சிறந்து குற்றமற்றதாயிருந்த வேதமானது பாஹ்யகுத்ருஷ்டிகளால் தாழ்வுபெற்றதுமல்லாமல், தாமஸ ராஜஸ ஜனங்கள் நிறைந்த காலத்திலே வந்து திருவவதரித்தருளி அத்தீமையைப் போக்கி உலகத்தை ரக்ஷித்தருளின மஹாநுபாவர் காண்மின் எம்பெருமானார்.

அரங்கர்மௌலி சூழ்கின்ற மாலையைச் சூடிக்கொடுத்த பாவையாம் ஆண்டாள் வைபவத்திற் காணத்தக்கது. ஆண்டாளின் [illegible] பார்த்து நம் எம்பெருமானார் வந்து [illegible] பின்னானாள். ... ... (கசு)

முடியார் துயரங்கள் முந்திலும் * இன்பங்கள் மொய்த்திடினும்
கனியார்மனம் கண்ணமங்கை நின்றானை * கலைபரவும்
தனியானையைத் தண்டமிழ்செய்த நீலன்றனக் குலகில்
இனியானை * எங்க ளிராமாநுசனை வந்தெய்தினரே. (கஎ)

கலை பரவும் தனி யானையை	எல்லா சாஸ்த்ரங்களாலும் கொண்டாடப்பெற்ற அத்விதீயமான மத்த கஜம் போன்றவனை	இனியானை	பக்தி முதலானவைகளால் எல்லோருக்கும் இனியவரான
		எங்கள்	எங்களுடைய
		இராமாநுசனை	எம்பெருமானாரை
		வந்து எய்தினர்	வந்தடைந்த மஹான்கள்
கண்ணமங்கை நின்றானை	திருக்கண்ணமங்கையிலே நின்றும் பக்தவத்ஸலப் பெருமாளைக் குறித்து	துயரங்கள் முந்திலும் முடியார்	தாபத்ரயம் பெருகினாலும் வருந்தமாட்டார்கள்;
உலகில்	இவ்வுலகில்	இன்பங்கள் மொய்த்திடினும் கனியார் மனம்	ஸுகங்கள் பெருகினாலும் களிப்படைய மாட்டார்கள்.
தண் தமிழ் செய்த	குளிர்ந்த தமிழ்ப் பாசுரங்களைச் செய்தருளின		
நீலன் தனக்கு	திருமங்கையாழ்வார் பொருட்டு		

* * *:—கலைகளால் கொண்டாடப்பட்ட எம்பெருமானைத் தம்முடைய திவ்யப்ரபந்தங்களில் அனுபவித்த திருமங்கையாழ்வார்க்கு அந்தரங்க பக்தரான எம்பெருமானாரை ஆச்ரயித்த மஹான்கள் ஸம்ஸாரத்தில் [illegible]

சோகங்களை யடையாமல் ஸந்தோஷமே அடைந்திருப்பார்கள்; நீங்களும் ஸம்ஸார சோகங்களில் கலங்கவேண்டா என்றபடி.

கண்ணமங்கை நின்றானை = திருக்கண்ண மங்கையைச் சொன்னது மற்றுமுள்ள ஸ்தலத் திருப்பதிகட்கும் உபலக்ஷணம்; பல திருப்பதிகளிலும் புக்குப் பாடின கலியன் என்றபடி. நீலன் = திருமங்கையாழ்வாருடைய திருநாமங்களில் ஒன்று. ... (கஎ)

எய்தற்கரிய மறைகளை * ஆயிர மின்தமிழாற்
செய்தற் குலகில் வருஞ் சடகோபனை * சிந்தையுள்ளே
பெய்தற் கிசையும் பெரியவர் சீரை யுயிர்களெல்லாம்
உய்தற் குதவும் * இராமாநுசனெம் முறுதுணையே. (கஅ)

எய்தற்கு அரிய மறைகளை	அதிகாரிகள் அடைய முடியாத (அனைவர்க்கும்) எட்டாத வேதங்களை	பெய்தற்கு இசையும்	[illegible]
இன் தமிழ் ஆயிரத்தால்	இனிய தமிழாகிய ஆயிரம் பாசுரங்களினால்	பெரியவர் சீரை	[illegible]
செய்தற்கு உலகில் வரும் சடகோபனை	அருளிச் செய்வதற்காக இவ்வுலகில் வந்தவதரித்த சடகோபனை	உயிர்கள் எல்லாம் உய்தற்கு உதவும் இராமாநுசன்	[illegible]
சிந்தை உள்ளே	தமது நெஞ்சுக்குள்ளே	எம் உறு துணை	[illegible]

போதம் தமிழ்செய்த மாறன் சடகோபனையே வாழ்த்தும் ஸ்ரீ மதுரகவிகளின் பக்தியை எம்பெருமானார் மிகவும் உகந்தருளினார் என்பது. இப்பாட்டில் ஸ்ரீ மதுரகவிகள் பெரியவர் என்று சிறப்பிக்கப்பட்டமை நோக்கத்தக்கது. "[illegible]" [பெரிய திருவந்தாதி] என்று [illegible] [illegible] [illegible] உள்ளத்தை பெரியவரிலே மதுரகவிகள். (கஅ)

உறுபெருஞ் செல்வமுந் தந்தையுந் தாயும் * உயர்குருவும்
வெறிதரு பூமகள் நாதனும் * மாறன் விளங்கியசீர்
நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந் நீணிலத்தோர்
அறிதர நின்ற * இராமாநுச னெனக் காரமுதே. (க௯)

உறு பெரு செல்வமும் தந்தையும் தாயும் உயர் குருவும்	[illegible]	மாறன் விளங்கிய சீர் நெறி தரும் செந்தமிழ் ஆரணமே என்று	[illegible]
வெறி தரு பூமகள் நாதனும்	[illegible]	இந் நீள் நிலத்தோர் அறிதர நின்ற இராமாநுசன் எனக்கு ஆர் அமுது	[illegible]

* * *:— 'தம்மைப்பற்றுவார்களுக்கெல்லாம் திருவாய்மொழிதான் எல்லா ஸர்வஸ்வமும்' என்றிவ் அர்த்தத்தை யுடைய எம்பெருமானார் இருந்த அடியேன் அவர் போக்யத்வ புத்தியுடையேன் என்றாராயிற்று.

மாறன் விளங்கிய சீர்நெறிதரும் செந்தமிழாரணம் = திருவாய்மொழியின் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் எம்பெருமானுடைய ஒவ்வொரு திவ்யகுணத்தை வெளியிட்டிருக்கிறார்; அது வெளியிட்டவாறு என்னென்னில், எம்பெருமான் ஆழ்வார்க்கு எந்த க்ரமமாகக் குணங்களை அநுபவிப்பித்தானோ அந்த க்ரமமாகவே இவர் வெளியிட்டாரென்க. (கக)

ஆரப்பொழில் தென்குருகைப்பிரான் * அமுதத் திருவாய்
ஈரத்தமிழின் இசையுணர்ந்தோர்கட்கு * இனியவர்தம்
சீரைப்பயின்றுய்யும் சீலங்கொள் நாதமுனியை நெஞ்சால்
வாரிப்பருகும் * இராமாநுசனென்றன் மாநிதியே. (உ0)

ஆரம் பொழில்	சந்தனச் சோலைகளை யுடைய	இனியவர் தம்	இஷ்டரான பிரபன்னர் களுடைய
தென் குருகை	அழகிய திருக்குருகூரில் (அவதரித்த)	சீரை	குணங்களை
பிரான்	மஹோபகாரகரான ஆழ்வாருடைய	பயின்று	அப்யஸித்து
அமுதம் திருவாய்	பரம்போக்யமான திருப் பவளத்தினின்றும்	உய்யும் சீலம் கொள்	உய்தல் பெறும் சீலத்தையுடையரான
ஈரம் தமிழின் இசை	ஈரத்தமிழான திருவாய்மொழியின் இசையை	நாதமுனியை	நாதமுனிகளை
உணர்ந்தோர்கட்கு	அறிந்தவர்களுக்கு	நெஞ்சால்	தம் திருவுள்ளத்தாலே
		வாரி பருகும்	ஆசையோடு அநுபவிக்கின்ற
		இராமாநுசன்	எம்பெருமானார்
		என் தன் மா நிதி	எனக்கு அக்ஷயமான நிதி.

நிதியைப்பொழியும் முகிலென்று * நீசர்தம் வாசல்பற்றித்
துதிகற்றுலகில் துவள்கின்றிலேன் இனி * தூய்நெறிசேர்
எதிகட்கிறைவன் யமுனைத்துறைவன் இணையடியாம்
கதிபெற்றுடைய * இராமாநுசனென்னைக் காத்தனனே. (உக)

தூய் நெறி சேர் எதிகட்கு	பரிசுத்தமான அநுஷ்டானமுடைய யதிகளுக்கு	என்னை காத்தனன்	என்னைக் காத்தருளினார் (ஆகையினால்)
இறைவன்	தலைவரான	இனி	இனிமேல்,—
யமுனைத் துறைவன்	ஆளவந்தாருடைய	நிதியை பொழியும் முகில் என்று	"நிதிகளை வர்ஷிக்கிற மேகமே!" என்று
இணை அடி ஆம் கதி	உபய பாதங்களான ப்ராப்யத்தை	துதி கற்று	ஸ்தோத்ரங்களைப் பண்ணிக்கொண்டு
பெற்று	பெற்று (அதனாலே)	உலகில்	இவ்வுலகத்தில்
உடைய	உடைத்தான ஸ்வாமியாயிருக்கிற எம்பெருமானார்	நீசர் தம்	நீசர்களாயிருப்பவருடைய
இராமாநுசன்		வாசல் பற்றி	வாசலைப்பற்றிநின்று
		துவள்கின்றிலேன்	வருந்தமாட்டேன்

வகை:— இத்துணையாயிலும் நல்ல ... கடைகளிலும் போய் நின்று வாசலைக்காட்டிப் பிற்றைக்காட்டி "மழையாகிப் பொழிகின்ற மேகமே!" என்று பொய்யான கவிகளைச் செய்து துவண்டேன்; இன்று முதல் எல்லாரும் இனி நான் அப்படித் துவளா

மாட்டேன்; நீசருடைய வாசலையும் பற்றமாட்டேன். இனி நான் எம்பெருமானாருடைய ஸம்பந்தத்தினாலே ஆளாய்விட்டேன்; ஆகையால், எதிகளுக்குத் தலைவரான ஆளவந்தாருடைய ஸம்பந்தத்தினையைப் பெற்றுடையவர். அன்னவரால் ரக்ஷிக்கப் பெற்றேனானபின்பு, இனி நான் ஏதுக்காக ஒரு நீசன் வாசலைப் பற்றி அலையவேண்டும்? ; அலையமாட்டேன். (௨௧)

கார்த்திகையானும் கரிமுகத்தானும் * கனலும் முக்கண்
மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகிட்டு * மூவுலகும்
பூத்தவனே என்று போற்றிட வாணன் பிழைபொறுத்த
தீர்த்தனை ஏத்தும் * இராமானுசன் என்தன் சேமவைப்பே. (௨௨)

கார்த்திகையானும்	ஸுப்ரஹ்மண்யனும்
கரிமுகத்தானும்	கணபதியும்
கனலும்	(அம்புக்குத் தீ எனலாம்படியாய் வந்த) அக்நியும்
முக்கண் மூர்த்தியும்	சிவனும்
மோடியும்	துர்க்கையும்
வெப்பும்	ஜ்வரதேவதையும்
முதுகு இட்டு	முதுகு காட்டி ஓடிப் போனபின்பு (அவன் பக்ஷபாதியான பாணனுக்குத்) துணைவன்
மூ உலகும் பூத்தவனே என்று போற்றிட	"மூன்று உலகங்களையும் திருநாபிக் கமலத்திலே உண்டாக்கின பெருமானே!" (என்னைக் காத்தருள்) என்று போற்ற
வாணன் பிழை பொறுத்த	(அந்த) பாணாஸுரனுடைய அபராதத்தை பொறுத்தருளின
தீர்த்தனை	பாவனனான கண்ணனை
ஏத்தும்	ஸ்தோத்ரம் பண்ணுகிற
இராமானுசன்	எம்பெருமானார்
என் தன் சேமவைப்பு	எனக்கு ஆபத்தனம்.

* * * :—[ஐச்வர்யம் அக்நியினிடத்து; ஆரோக்யம் பாஸ்கரனிடத்து; ஞானம் மஹேச்வரனிடத்து; செல்வமொடு விரும்பியவெல்லாம்; மோக்ஷம் ஜநார்த்தனனிடத்து பெற விரும்பவேண்டும்] என்பது சாஸ்த்ரங்களின் சொல்லாயிருக்க; அதிலே நம்பி ஒருவன் அமுதனாரை நோக்கி 'நீர் எம்பெருமானாரைப் பற்றினால் உம்முடைய காரியம் நிறைவேறுமோ? அவரைப் பற்றினவர்களுக்கு செல்வம் கிட்டுமோ?' என்றான்; அந்த வேண்டாத பதங்களுக்கு விடையாக ஒரு இதனைக் காட்டுகிறார்; அதாவது, 'எம்பெருமானார் நமக்கு ஆபத்தனம்' என்கிறார். இனி வேறு அருமையான தனத்தை உடைத்தல் அவசியமில்லை என்கிறார் இதில்.

வைப்பாய வான்பொருளென்று * நல்லன்பர் மனத்தகத்தே
எப்போதும் வைக்கு மிராமாநுசனை * இருநிலத்தில்
ஒப்பாரிலாத வுறுவினையேன் வஞ்ச நெஞ்சில்வைத்து
முப்போதும் வாழ்த்துவன் * என்னாமிது அவன் மொய்புகழ்க்கே? (௨௩)

நல் அன்பர்	விலக்ஷணமான பக்தியுடையவர்கள்
வைப்பு ஆய வான் பொருள் என்று	"எம்பெருமானார் நாம் சேமித்து வைத்த பெரிய தனம்" என்று கொண்டு
மனத்தகத்தே	தங்கள் ஹ்ருதயத்திலே
எப்போதும் வைக்கும்	எப்போதும் தங்கியிருக்கும்படியான
இராமானுசனை	எம்பெருமானாரை
இரு நிலத்தில்	இந்தப் பெரிய பூமண்டலத்திலே
ஒப்பார் இலாத உறு வினையேன்	ஒப்பற்ற மஹாபாபியான அடியேன்
வஞ்ச நெஞ்சில் வைத்து	(என்னுடைய) க்ருத்ரிமமான நெஞ்சிலே வைத்து
முப்போதும் வாழ்த்துவன்	எப்பொழுதும் துதிக்கிறேன்;
இது	இப்படி பாபியான நான் வாழ்த்துவதாகிற இது
அவன்	அந்த எம்பெருமானாருடைய
மொய் புகழ்க்கு	சிறந்த கீர்த்திக்கு
என் ஆம்	என்னாகுமோ? [அவத்யமே!]

[illegible] "[illegible]" என்ற [illegible] [illegible], இப்பாட்டில் [illegible].

மொய்த்தவெந் தீவினையால் பல்லுடல்தோறும் மூத்து* அதனால்
எய்த்தொழிந்தேன் முனநாட்களெல்லாம்* இன்று கண்டுயர்ந்தேன்
பொய்த்தவம் போற்றும் புலச்சமயங்கள் நிலத்தவியக்
கைத்தமெய்ஞ்ஞானத்து* இராமாநுசனென்னும் கார்தன்னையே.

முன நாட்களெல்லாம்	இதற்கு முந்தின [illegible] மெல்லாம்	பொய்த்தவம் போற்றும் புலச்சமயங்கள்	[illegible]
பல்லுடல்தோறும்	பலபல சரீரங்கள் தோறும்	நிலத்தவிய	[illegible]
மொய்த்த வெம் தீவினையால் மூத்து	[illegible]	கைத்த	[illegible]
		மெய் ஞானத்து	[illegible]
		இராமாநுசன் என்னும் கார் தன்னை	[illegible]
அதனால் எய்த்து ஒழிந்தேன்	அத்தாலே [illegible] ;	இன்று கண்டு உயர்ந்தேன்	இன்று அடியேன் [illegible]

[illegible]

பொய்த்தவம் போற்றும் புலச்சமயங்கள் [illegible] மெய்ஞ்ஞானத்திராமாநுசன்—"யதார்த்தம் [illegible]" என்று [illegible] எம்பெருமானார். ... ... ([illegible])

காரேய் கருணை இராமாநுச* இக்கடலிடத்தில்
ஆரே அறிபவர் நின்னருளின் தன்மை* அல்லலுக்கு
நேரே உறைவிடம் நான்வந்து நீயென்னை உய்த்தபின்உன்
சீரே உயிர்க்குயிராய்* அடியேற்கின்று தித்திக்குமே ([illegible])

கார் ஏய் கருணை இராமாநுச!	மேகத்தையொத்த கருணையையுடைய எம்பெருமானாரே!	உன் சீர்	தேவரீருடைய [illegible]
[illegible]	[illegible]	உயிர்க்கு உயிர் ஆய்	[illegible]
[illegible]	[illegible]	அடியேற்கு	அடியேனுக்கு
[illegible]	[illegible]	இன்று தித்திக்கும்	இன்று [illegible]
[illegible]	[illegible]	நின் அருளின் தன்மை	[illegible]
[illegible]	[illegible]	இ கடல் இடத்தில்	[illegible]
[illegible]	[illegible]	ஆரே அறிபவர்	[illegible]

∴ ∴ ∴ :—நிலன் தலைப்பாகம் பாராமல் ஸர்வத்ர ஸமமாக வர்ஷிக்கின்ற மேகம்போலே, தாழ்ந்தோர் உயர்ந்தோர் என்னும் வாசிபாராமல் எல்லார்திறத்தும் அருள் புரிகின்ற எம்பெருமானாரே! மிகவேயுடைய குற்றங்களுக்கெல்லாம் இருப்பிடமான என்னை தேவரீர் அங்கே வந்து விஷயீகரித்தபின்பு தேவரீருடைய திருக்கல்யாண குணங்களே எனக்குப் பரமபோக்யமாய் ஆகட்டகாசக்யமாய்விட்டது. தேவரீர் திருவபார்த்த ப்ரபந்நகாஸந்யர் என்னுமிடத்தை இவ்வுலகில் உள்ள யாவரும் அறிவார்கள். ... ... (௬௰)

திக்குற்றகீர்த்தி இராமாநுசனை * என் செய்வினையாம்
மெய்க்குற்றம்நீக்கி விளங்கிய மேகத்தை * மேவும்நல்லோர்
எக்குற்றவாளர் எதுபிறப் பேதியல்வாக நின்றோர்
அக்குற்ற மப்பிறப்பு * அவ்வியல்வே நம்மையாட்கொள்ளுமே. (௬௧)

என் செய்வினை ஆம்	என்னுடைய செய்யப்பட்ட வினையாகிற	எக்குற்றவாளர்	யாதொரு குற்றத்தை உடையவர்களாகவும்
மெய் குற்றம் நீக்கி	விளைகின்ற தோஷத்தைக் களைந்துபோக்கி		
விளங்கிய	(இவனுடைய தோஷம் விலைப் போகப் பெற்றோம் என்னும் ஸந்தோஷத்தினாலே) உஜ்ஜ்வலரான	எது பிறப்பு	யாதொரு ஜன்மத்தை உடையவர்களாகவும்
		ஏது இயல்வு ஆக	யாதொரு சரித்ரத்தை உடையவர்களாகவும்
மேகத்தை	பரம உதாரரான	நின்றோர்	போய் நின்றார்களோ,
திக்கு உற்ற கீர்த்தி	திசைகளெங்கும் விஸ்த்ருதமான புகழை உடையவரான	அக்குற்றம்	அந்தக் குற்றமும்
		அப்பிறப்பு	அந்த ஜன்மமும்
		அவ்வியல்வே	அந்த சரித்ரமுமே
இராமாநுசனை	எம்பெருமானாரை	நம்மை	நம்மை
மேவும் நல்லோர்	பொருந்தியிருக்கின்ற விலக்ஷணர்கள்	ஆள் கொள்ளும்	அடிமைப்படுத்திக் கொள்ளவற்று.

∴ ∴ ∴ :—ஸ்ரீராமாநுஜ பக்தர்களுடைய ஜாதி முதலியவை எதுவாயினும் அவர்களெல்லாரும் அப்படியே நமக்கு உத்தேச்யர்கள் என்று கருத்து. ... ... (௬௧)

கொள்ளக் குறைவற்றிலங்கி * கொழுந்துவிட் டோங்கியவுன்
வள்ளற்றனத்தினால் வல்வினையேன் மனம் நீபுகுந்தாய் *
வெள்ளைச் சுடர்விடுமுன் பெருமேன்மைக் கிழுக்கிதென்று
தள்ளுற்றிரங்கும் * இராமாநுசவென் தனிநெஞ்சமே. (௬௨)

இராமாநுச	எம்பெருமானாரே!		
கொள்ள குறைவு அற்று இலங்கி	கொள்ளக்கொள்ளக் குறையாமல் தழைத்து விளங்கி	நீ	(வெளியிடப்பட்ட [illegible] தாழ்ந்துபோகாமல்) புகுந்துவிட்டாய்.
கொழுந்து விட்டு ஓங்கிய	மேன்மேலும் இளைப்பு பரிந்து வளர்ந்திருப்பதான	வெள்ளை	பரிசுத்தமாய்
		சுடர் விடும்	விளக்கமுள்ளதான
உன் வள்ளல் தனத்தினால்	தேவரீருடைய ஔதார்ய குணத்தாலே	உன் பெரு மேன்மைக்கு	தேவரீருடைய ப்ரபாவத்திற்கு
வல்வினையேன் மனம்	மஹாபாபியான என்னுடைய நெஞ்சிலே	இழுக்கு இது என்று	அவத்யமாகும் என்று
		என் தனி நெஞ்சம்	என்னுடைய அனந்யமான நெஞ்சமானது
நீ புகுந்தாய்	(தேவரீருடைய பெருமை பாராதே) வந்து புகுந்தருளினது;	தள்ளுற்று இரங்கும்	தளர்ந்து ஈடுபடாநின்றது.

* * *:—ஸ்வாமீ! தேவரீருடைய பெருமையையும் அடியேனுடைய சிறுமையையும் சிறிதும் பாராமல் "இவன் என் அடியார் விஷயத்திலே ஈடுபட்டிருப்பானொருவன்" என்கிற இவ்வளவையே கொண்டு [illegible] என் [illegible] தேவரீர் புகுந்தருளினது: [illegible] தேவரீருடைய பரிசுத்தமான [illegible] அத்புதமாக [illegible] ... ... (உஎ)

நெஞ்சிற்கறைகொண்ட கஞ்சனைக் காய்ந்தநிமலன் * நங்கள்
பஞ்சித்திருவடிப் பின்னைதன் காதலன் * பாதம்நண்ணா
வஞ்சர்க்கரிய இராமானுசன் புகழன்றி யென்வாய்
கொஞ்சிப் பரவகில்லாது * என்னவாழ்வின்று கூடியதே. (உஅ)

நெஞ்சில் கறைகொண்ட கஞ்சனை	நெஞ்சிலே கல்மஷத்தை உடையனாயிருந்த கம்ஸனை	பாதம் நண்ணா	திருவடிகளை அடைந்திராத
காய்ந்த	முடித்த	வஞ்சர்க்கு	ஆத்மாபஹாரிகளான கள்வர்க்கு
நிமலன்	தோஷமற்ற ஸர்வேச்வரனும்	அரிய	அருமைப்பட்டவரான
நங்கள் பஞ்சி திருவடி	ஆச்ரிதர்களுக்கு அநுகூலமாய் பஞ்சு போல் மெல்லிய திருவடிகளை உடையவளான	இராமானுசன்	எம்பெருமானாருடைய
		புகழ் அன்றி	குணங்களை யொழிய (மற்றொன்றை)
		என் வாய்	என் வாக்கானது
		கொஞ்சி பரவகில்லாது	குளறித் துதிக்கமாட்டாது;
ஞானமானது நன்றாகக் கனிந்து அது பக்தி, பரபக்தி, பரமபக்தி என்னப்பட்டபோது அவஸ்தைகளையடைந்து, அந்நிலை இந்த ஸம்ஸாரத்தில் கஷ்டமான பிரிவாற்றாமையாகும் ஆழ்வார்களைப்போல "ஒரு பகலாயிரமூழியாலோ" என்று அடிப்பவர்களுக்குத்தான் எம்பெருமான் முக்தியளிப்பது; எம்பெருமானாரோ வென்னில் அநுபாயமாகப் பிரபத்தியைத்தானடைய, அடியார்களிடத்தில் சம்பந்தமான கிலேசமுமின்றி எதிர்பாராமல் தமது திருவருளைக் கொண்டே அவர்களை கரையேற்றுவர் என்றவாறு.

[illegible] என்பதற்கு—[illegible] வரும்
[illegible] எம்பெருமானார் என்று உரைக்கப்படும். (௬௬)

சரணமடைந்த தருமனுக்கா * பண்டு நூற்றுவரை
மரணமடைவித்த மாயவன் * தன்னை வணங்க வைத்த
கரணமிவையுமக்கன்றென்று இராமாநுசன் உயிர்கட்கு
அரணங்கமைத்திலனேல் * அரணார் மற்றிவ்வாருயிர்க்கே. (௬௭)

சரணம் அடைந்த தருமனுக்கு ஆ	தன்னைச் சரணம் பற்றின தர்ம புத்திரனுக்காக	உமக்கு அன்று	உங்களுக்கு உரியவைப் பட்டவையல்ல;
பண்டு	முற்காலத்திலே	என்று	என்று இவ்வாறு உபதேசித்து
நூற்றுவரை	துரியோதனன் முதலிய நூற்றுவரை	இராமாநுசன்	எம்பெருமானார்
		உயிர்கட்கு	ஆத்மாக்களுக்கு
மரணம் அடைவித்த மாயவன்	சாகும்படி செய்த எம்பெருமான்	அரண் அமைத்திலன் ஆகில்	ரக்ஷையைக் கற்பித்திலராகில்
தன்னை வணங்க வைத்த கரணம் இவை	தன்னை வழிபடுவதற்காகவே ஏற்படுத்தி வைத்த இந்திரியங்களாம் இவை;	இ ஆர் உயிர்க்கு	இந்த அருமையான ஆத்மாக்களுக்கு
		மற்று அரண் ஆர்	வேறு ரக்ஷகராவார் ஆர்? (ஆருமில்லை.)

ஆரெனக்கின்று நிகர்சொல்லில் * மாயனன்றைவர்தெய்வத்
தேரினிற்செப்பிய கீதையின்செம்மை * பொருள்தெரியப்
பாரினிற்சொன்ன இராமாநுசனைப் பணியும்நல்லோர்
சீரினிற்சென்றுபணிந்தது * என்னாவியும் சிந்தையுமே. (௬௮)

மாயன்	ஆச்சர்ய சேஷ்டிதங்களை உடைய எம்பெருமான்	பாரினில்	இப்பூமியிலே
அன்று	முற்காலத்தில்	சொன்ன	(கீதா பாஷ்ய முகத்தாலே) அருளிச் செய்த
ஐவர்	பஞ்சபாண்டவர்களுடைய	இராமாநுசனை	எம்பெருமானாரை
		பணியும்	ஆச்ரயித்திருக்கிற
தெய்வம் தேரினில்	தெய்வத்தன்மை பொருந்திய தேரின் மீது (இருந்துகொண்டு)	நல்லோர்	விலக்ஷண புருஷர்களுடைய
		சீரினில்	கல்யாண குணங்களிலே
செப்பிய கீதையின்	அருளிச்செய்த பகவத் கீதையினுடைய	என் ஆவியும் சிந்தையும்	எனது ஆத்மாவும் மனமும்
செம்மை பொருள்	ஸாரமான அர்த்தத்தை	சென்று பணிந்தது	சென்று சேர்ந்துவிட்டன;
தெரிய	(அனைவரும் எளிதாகத்) தெரிந்து கொள்ளும்படி	சொல்லில்	சொல்லுமளவில்
		இன்று	இக்காலத்தில்
		எனக்கு ஆர் நிகர்	எனக்கு ஆர் ஒப்பாவார்?

சிந்தையினோடு கரணங்கள்யாவும் சிதைந்து * முன்னாள்
அந்தமுற்றாழ்ந்ததுகண்டு * இவையென்தனக்கன்றருளால்
தந்தஅரங்கனும் தன்சரண்தந்திலன் தானதுதந்து *
எந்தைஇராமாநுசன் வந்தெடுத்தனன் இன்றென்னையே. (௬௯)

பிறவும் கரந்தது — பிறவும் அதிசயித்தது.
என் செய்கை — எனது செய்கையும்
உன் தன் குணங்களுக்கே தீர்ந்தது — தேவரீருடைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது;
முன் செய் வினை — முன்பே செய்த பாவங்களெல்லாம்
நீ செய் வினை அதனால் பேர்ந்தது — தேவரீர் செய்தருளிய (கடாக்ஷமாகிற) சுகிருதத்தாலே தொலைந்துபோயின.

கைத்தனன் தீய சமயக்கலகரை * காசினிக்கே
உய்த்தனன் தூய மறைநெறி தன்னை * என்றுன்னியுள்ளம்
நெய்த்தவன்போடிருந்தேத்தும் நிறைபுகழோருடனே
வைத்தனனென்னை * இராமாநுசன் மிக்க வண்மைசெய்தே. (எஉ)

இராமாநுசன் — எம்பெருமானார்
மிக்க வண்மை செய்து — தமது ஔதார்ய குணத்தை அதிசயமாகக் காட்டி,
தீய சமயம் கலகரை — தீய மதங்களிலிருந்து கொண்டு கலகஞ் செய்கிறவர்களை
கைத்தனன் — ஒழித்துவிட்டார்;
தூய — பரிசுத்தமான
மறை நெறி தன்னை — வேதமார்க்கத்தை
காசினிக்கு உய்த்தனன் — பூமியிலே ப்ரதிஷ்டித்தருளினார்;
என்று உன்னி — என்று அநுஸந்தித்து
உள்ளம் நெய்த்து — நெஞ்சு களித்து
அவ்வன்போடு இருந்து — அந்த ப்ரீதியோடே கூடியிருந்து
ஏத்தும் — (அவரை) ஸ்தோத்ரம் பண்ணுகிற
நிறை புகழோருடனே — புகழ் நிறைந்த மஹான்களோடே
என்னை வைத்தனன் — (என்னையும் ஒருவனாக எண்ணும்படி) என்னை வைத்தருளினார்.

நிறைபுகழோருடனே வைத்தனன்:—அவர்களுக்கோரோடே பழகும்படி என்னை வைத்தருளி னாரோடே கூட்டி வைத்தார் என்னவுமாம் ... ... (எஉ)

வண்மையினாலும் தன்மாதகவாலும் * மதிபுரையும்
தண்மையினாலு மித்தாரணியோர்கட்கு * தான்சரணாய்
உண்மைநன்ஞான முரைத்தவிராமா நுசனையுன்னும்
திண்மையல்லாலெனக்கில்லை * மற்றோர்நிலை தேர்ந்திடிலே. (எஙு)

தன் வண்மையினாலும் — தம்முடைய ஔதார்ய குணத்தாலும்
மா தகவாலும் — பரமக்ருபையாலும்
மதி புரையும் தண்மையினாலும் — சந்திரனையொத்த திருவுள்ளக் குளிர்ச்சியாலும்
இத்தாரணியோர்கட்கு — இப்பூமியிலுள்ளவர்களுக்கு
தான் சரண் ஆய் — தாமே ரக்ஷகராய்க் கொண்டு
உண்மை நல் ஞானம் உரைத்த இராமானுசனை — யதார்த்தமாய் விலக்ஷணமான ஞானத்தை உபதேசித்த எம்பெருமானாரை
உன்னும் திண்மை அல்லால் — சிந்திப்பதாகிற அத்யவஸாயமொன்று தவிர
தேர்ந்திடில் — ஆராயுமளவில்
எனக்கு மற்று ஓர் நிலை இல்லை — அடியேனுக்கு வேறொரு அத்யவஸாயமில்லை.

தேரார்மறையின் திறமென்று * மாயவன் தீயவரை
கூராழிகொண்டு குறைப்பது * கொண்டலனையவண்மை
ஏரார் குணத்தெம் இராமாநுசனவ்வெழில்மறையில்
சேராதவரைச்சிதைப்பது * அப்போதொரு சிந்தைசெய்தே. (எச)

முன் னாள்	ஸ்ருஷ்டிக்கு முற்காலத்தில்.
சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து	சிந்தையும் இந்திரியங்களும் எல்லாம் அழிந்து
அந்தம் உற்று ஆழ்ந்தது கண்டு	உபஸம்ஹார தசையடைந்து அசேதனப்ராயமாயிருப்பதைப் பார்த்து
என் தனக்கு	(அப்படி அசேதனப்ராயமாய்க் கிடந்தவர்களில் ஒருவனான) எனக்கு
அன்று	அந்த காலவிசேஷத்தில்
இவை	அக்கரணங்களை
அருளால் தந்த அரங்கனும்	கிருபையாலே உண்டாக்கின எம்பெருமானும்
தன் சரண் தந்திலன்	தனது திருவடிகளைக் காட்டிக் கொடுத்து உஜ்ஜீவிப்பிக்கவில்லை.

(அக்குறை தீர)

எந்தை இராமானுசன் தான் வந்து	ஸ்வாமி எம்பெருமானாரும் தாமாகவே வந்து
அது தந்து	அந்தத் திருவடிகளைத் தந்தருளி
இன்று என்னை எடுத்தனன்	இன்று என்னை ஸம்ஸாரத்தில் நின்றும் உத்தரிப்பித்தார்.

என்னையும் பார்த்தென் இயல்வையும் பார்த்து * எண்ணில் பல்குணத்த
உன்னையும் பார்க்கில் அருள்செய்வதே நலம் * அன்றி என்பால்
பின்னையும் பார்க்கில் நலமுளதே உன் பெருங்கருணை
தன்னை என் பார்ப்பர் * இராமானுச உன்னைச் சார்ந்தவரே. (௭௰)

இராமானுச	எம்பெருமானாரே!
என்னையும் பார்த்து	(ஒரு குணமுமில்லாமல் குற்றமே நிறைந்திருக்கிற) என்னையும் நோக்கி
என் இயல்வையும் பார்த்து	(இனிமேலும் எவ்வித நன்மையும் படைத்துக்கொள்ள முடியாமலிருக்கிற) என்னுடைய தன்மையையும் நோக்கி
எண் இல் பல் குணத்த உன்னையும் பார்க்கில்	எண்ணிறந்த பல திருக்குணங்களையுடைய தேவரீரையும் நோக்குமளவில்
அருள் செய்வதே நலம்	(இப்போது போல எப்போதும்) அருள்செய்திருப்பதே நன்று;
அன்றி	இதுவொழிய
பின்னையும் பார்க்கில்	வேறும் ஆராயுமளவில்
என்பால் நலம் உளதே	என்னிடத்தில் ஏதாவது நன்மை உண்டோ? (சிறிதும் இல்லை)

(நன்மையொன்றுமில்லையென்று நாம் அருள் செய்யலாகாதென்று திருவுள்ளம் பற்றில்)

உன்னை சார்ந்தவர்	தேவரீரை ஆச்ரயித்தவர்கள்
உன் பெரு கருணை தன்னை என் பார்ப்பர்	(தேவரீருடைய இருமையைப் பற்றி என்ன நினைப்பார்கள்?) இப்படியான நினைப்பார்களே.)

சார்ந்ததென் சிந்தை உன் தாளிணைக்கீழ் * அன்பு தான் மிகவும்
கூர்ந்தது அத் தாமரைத் தாள்களுக்கு * உன் தன் குணங்களுக்கே
தீர்ந்ததென் செய்கை முன் செய்வினை நீ செய்வினை அதனால்
பேர்ந்தது * வண்மை இராமானுச! எம் பெருந்தகையே. (௭௧)

வண்மை	ஔதார்யமுடையவரும்
எம்	எமக்கு ஸ்வாமியும்
பெருந்தகை	பெருந்தன்மையுடையவருமான
இராமானுச	எம்பெருமானாரே!
என் சிந்தை	எனது நெஞ்சு
மிகவும் கூர்ந்தது	மிகவும் அதிகரித்தது.
என் செய்கை	எனது செயலும்
உன் தன் குணங்களுக்கே தீர்ந்தது	தேவரீருடைய திருக்குணங்களுக்கே அற்றுத் தீர்ந்தது;

மறையின் திறம் தேரார் என்று	(இப்படியின்) வேதத்து சொல்லுகிற வழியை நிரூபித்தறிகிறதில்லை யென்று
தீயவரை	பாவிகளை
மாயவன்	எம்பெருமான்
குறைப்பது	துண்டிப்பது
கூர் ஆழி கொண்டு	கூர்மையான தனது திருவாழியாலே;
கொண்டல் அனைய வண்மை	மேகம்போன்ற ஔதார்ய குணமுடையவரும்
ஏர் ஆர் குணத்து	(மற்றும்) பல நல்லகுணங்களுடையவருமான
எம் இராமாநுசன்	எங்கள் எம்பெருமானார்
அவ் எழில் மறையில் சேராதவரை சிதைப்பது	அந்த சிறந்த வேதத்தில் அங்கீகரியாதவர்களை பங்கப்படுத்துவது (எப்படியென்றால்)
அப்போது ஒரு சிந்தை செய்து	அப்போதைக்கப்போது ஒவ்வொரு யுக்தியைக் கொண்டாம்.

* * *:—எம்பெருமான் தனது ஆஜ்ஞாரூபமான வேதங்களின் கட்டளைப்படி நடவாத கொடியவர்களைத் தனது திருவாழியைக் கொண்டு கண்டனம் பண்ணிவிடுவன்; எம்பெருமானாரோவென்னில் அவ்வளவு ஆயாஸம் எடுத்துக்கொள்வதில்லை; வேதங்களை அடியோடு ஒப்புக்கொள்ளாத பாஹ்யர்களையும், வேதங்களைப் பிரமாணமாக ஒப்புக்கொண்டு அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளையும் வாதப்போரில் அப்போதைக்கப்போது திருவுள்ளத்தில் உதிக்கின்ற நல்யுக்திகளைக்கொண்டு கண்டித்து விடுவர் என்கை. (எச)

செய்த்தலைச்சங்கம் செழுமுத்தமீனும் * திருவரங்கர்
கைத்தலத்தாழியும் சங்கமுமேந்தி * நங்கண்முகப்பே
மொய்த்தலைத்துன்னை விடேனென்றிருக்கிலும் நின்புகழே
மொய்த்தலைக்கும்வந்து * இராமாநுசவென்னை முற்றுநின்றே. (எரு)

செய் தலை	வயல்களில்
சங்கம்	சங்குகளானவை
செழு முத்தம்	அழகிய முத்துக்களை
ஈனும் திரு அரங்கர்	உண்டாக்கும்படியான திருவரங்கமா நகரில் எழுந்தருளியிருக்கும் பெருமாள்
கைத்தலத்து	தமது திருக்கைகளிலே
ஆழியும் சங்கமும் ஏந்தி	திருவாழி திருச்சங்குகளைத் தரித்துக் கொண்டு
நம் கண் முகப்பே	நமது கண்ணெதிரில்
மொய்த்து	வந்து நெருங்கி
அலைத்து	புத்தியைக் கெடுத்து
உன்னை விடேன் என்று இருக்கிலும்	உன்னை விடமாட்டேன் என்று இருந்தாலும்,
இராமாநுச	எம்பெருமானாரே!
நின் புகழே	தேவரீருடைய திவ்ய குணங்களே
என்னை வந்து முற்றும் மொய்த்து நின்று அலைக்கும்	என் பக்கல் வந்து சூழ்ந்துகொண்டு ஆகர்ஷிக்கின்றன.

* * *:—எம்பெருமான் தனது விலக்ஷணமான அழகைக் காட்டிக் கொண்டு வந்து என் கண்ணெதிரே நின்றாலும், என்னை விடாதே வசியப்படுத்தினாலும் அவனது அழகில் நான் மோஹிக்கப் பெறுவதில்லை; தேவரீருடைய திருக்குணங்களே என்னை ஈடுபடுத்துகின்றன. பகவத் குணங்களுக்கு நான் ஈடுபடுவதில்லை யென்றவாறு. (எரு)

"செய்த் தலைச்சங்கம் செழுமுத்தமீனும்" என்கிற விசேஷணம்-திருவரங்கர் என்பதன் பகுதியாகிய திருவரங்கத்தில் அந்வயிக்கும். திருவரங்கம் எப்படிப்பட்டதென்றால், முத்துக்களை ஈன்கின்ற சங்குகள் நிறைந்த வயல்சூழ்ந்தது என்றவாறு. ஈனுதல்-பிரஸவித்தல்.

நின்றவண் கீர்த்தியும் நீள்புனலும் * நிறைவேங்கடப்பொற்
குன்றமும் வைகுந்தநாடும் குலவிய பாற்கடலும் *
உன்றனக் கெத்தனை யின்பந்தரு முன்னிணைமலர்த்தாள்
என்றனக்குமது * இராமாநுசா இவை யீந்தருளே. (எசு)

இராமாநுசனே	எம்பெருமானாரே!
நின்ற வண் கீர்த்தியும் நீள் புனலும் நிறை	நிலைநின்ற பெரும் புகழும் அதிகமான தீர்த்தப் பெருக்கும் நிறைந்துள்ள
வேங்கடம் என்னும் குன்றமும்	திருவேங்கடமென்னும் அழகிய திருமலையும்
வைகுந்தம் நாடும்	ஸ்ரீ வைகுண்டமாகிய திருநாடும்
குலவிய பாற் கடலும்	கொண்டாடத்தக்க திருப்பாற்கடலும்
உன் தனக்கு	தேவரீருக்கு
எத்தனை இன்பம் தரும்	எவ்வளவு ஆனந்தத்தை விளைக்குமோ
உன் இணை மலர் தாள்	தேவரீருடைய உபய பாதாரவிந்தங்கள்
என் தனக்கும் அது	எனக்கும் அவ்வளவு ஆனந்தத்தை பண்ணாநிற்கும்;
இறை	இப்படிப்பட்ட திருவடிகளை
ஈந்தருள்	அடியேனுக்குத் தந்தருள வேணும்.

* * *:—இப்பாட்டில் அமுதனார் விளக்கிய பாவபந்தத்தை அறிந்த எம்பெருமானார் மிகவும் உகந்தருளி 'இவர்க்கு நாம் என்னதைச் செய்வோம்' என்றிருப்பதாகக் கண்ட அமுதனார், ஸ்வாமின்! அடியேனுக்கு தேவரீர் வேறொன்றும் செய்தருளவேண்டா; அடியேனுக்கு ஸர்வஸ்வமாகிய இந்தத் திருவடித்தாமரைகளைத் தந்தருளவேண்டுமத்தனை யென்கிறார். (எசு)

ஈந்தனனீயாதவின்னருள் * எண்ணில்மறைக்குறும்பைப்
பாய்ந்தனனம்மறைப்பல்பொருளால் * இப்படியனைத்தும்
ஏய்ந்தனன் கீர்த்தியினு லென்வினைகளை வேர்பறியக்
காய்ந்தனன் * வண்மை யிராமாநுசற்கென் கருத்தினியே ? (எஎ)

ஈயாத	(இதற்கு முன்பு ஒருவர்க்கும்) அருளாத
இன் அருள்	விலக்ஷணமான கருணையை
ஈந்தனன்	அடியேனுக்குச் செய்தருளின வரும்,
எண் இல் மறை குறும்பை	எண்ணிறந்த வேதவிரோதிகளை
அம்மறை பல்பொருளால் பாய்ந்தனன்	அந்த வேதங்களின் அர்த்தங்களாலேயே வென்று கண்டித்தவரும்,
கீர்த்தியினால்	தமது கீர்த்தியாலே
இப்படி அனைத்தும் ஏய்ந்தனன்	இப்பூமியெங்கும் வியாபித்தவரும்
என் வினைகளை	எனது கருமங்களை
வேர் பறிய காய்ந்தனன்	வேரோடே அறும்படி போக்கினவரும்
வண்மை	ஔதார்யமே வடிவு கொண்டவருமான
இராமாநுசற்கு	எம்பெருமானார்க்கு
இனி என் கருத்து	இன்னமும் (செய்யத்தக்கதாகத்) திருவுள்ளத்தில் ஏதேனும் முண்டோ?

* * *.—இப்பாட்டில் தாம் அபேக்ஷித்தபடியே திருவடிகளைத் தந்தருளப்பெற்று, க்ருதஜ்ஞராய், அவர் செய்தருளின உபகாரங்களை அநுஸந்தித்து, இவையெல்லாம் செய்தபின்பு இன்னமும் செய்தருளுவதாகத் திருவுள்ளம்பற்றியிருப்பது எதுவோ என்கிறார்.

மறைக்குறும்பாவது—வேதத்திற்கு மாறாகச்சொல்லும் தப்புப்பொருள்கள். ஈந்தனன், பாய்ந்தனன், ஏய்ந்தனன், காய்ந்தனன் என்பவற்றை வினைமுற்றுகளாகவே கொண்டு உரைத்தலுமாம். (எஎ)

கருத்திற்புகுந்துள்ளில்கள்ளங்கழற்றி * கருதரிய
வருத்தத்தினல் மிகவஞ்சித்து * நீயிந்தமண்ணகத்தே
திருத்தித்திருமகள் கேள்வனுக்காக்கியபின் என்னெஞ்சில்
பொருத்தப்படாது * எம்மிராமாநுச ! மற்றோர் பொய்ப்பொருளே. (எஅ)

எம் இராமாநுச	எம்பெருமானாரே!
நீ	தேவரீர்
கருத அரிய வருத்தத்தினால் மிக வஞ்சித்து	நெஞ்சால் நினைக்க முடியாத பரிச்ரமங்கள் பட்டு என்னை வஞ்சனையாக ஏமாற்றி

கருத்தில் புகுந்து	(என்னுடைய) நெஞ்சிலே வந்து புகுந்து	திரு மகள் கேள்வனுக்கு ஆக்கிய பின்	திருமாலுக்கு ஆளாக்கப் பண்ணினபின்பு
உள்ளில் கள்ளம் கழற்றி	உள்ளேயிருந்த ஆத்மாபஹார தோஷத்தைப் போக்கி	மற்று ஓர் பொய்ப்பொருள்	(இதற்கு மாறான) வேறு எந்த அற்பவிஷயமும்
திருத்தி	திருத்தி	என் நெஞ்சில்	என் மனத்தில்
இந்த மண் அகத்தே	இந்த லோகத்திலே	பொருந்தப்படாது	பொருந்தமாட்டாது.

* * *—எம்பெருமானார் தம்மைத் திருத்துவதற்காகப் பட்டபாடுகளை எடுத்துச் சொல்லி, இப்படி என்னைத் திருத்தி தேவரீருக்கு பக்ஷபாதமான விஷயத்திலே ஆட்படுத்தினபின்பு இனி வேறு எந்த விஷயமும் என்னெஞ்சுக்கு இசையமாட்டாதென்கிறார். (எ௮)

பொய்மையைச்சரக்கும் பொருளைத்துரந்து * இந்தப் பூதலத்தே
மெய்மையைப் புரக்குமிராமாநுசன்நிற்க * வேறுநம்மை
உய்யக்கொள்ள வல்லதெய்வமிங்கியாதென் றுலர்ந்துஅவமே
ஐயப்படா நிற்பர் * வையத்துள்ளோர் நல்லறிவிழந்தே. (எ௯)

பொய்மையை சுரக்கும் பொருளை துரந்து	பொய்யான விஷயத்தையே மேன்மேலும் வெளிப்படுத்துகிற (பரமதஸ்தர்களின்) அர்த்தங்களைக் கண்டித்து	வேறு தெய்வம் இங்கு யாது என்று	வேறு எந்த தேவதை இவ்வுலகில் உண்டோ? என்று விசாரித்துக் கொண்டு
இந்த பூதலத்தே	இப்பூமியிலே	உலர்ந்து	மன வருத்தத்தாலே உடம்பு உலர்ந்து
மெய்மையை புரக்கும்	ஸத்யத்தை ரக்ஷிக்கிற		
இராமாநுசன்	எம்பெருமானார்	நல் அறிவு இழந்து	(எம்பெருமானார் திருவடிகளே சரணம் என்று நிச்சயிக்கிற) நல்ல ஞானமில்லாமல்
நிற்க	எழுந்தருளியிருக்கும் போது		
(இவரைக் கவனியாமல்)		அவமே	வீணாக
வையத்து உள்ளோர்	இப்பூமியிலுள்ளவர்கள்	ஐயப்படா நிற்பர்	ஸம்சயப்படா நின்றார்கள். ஐயோ!
நம்மை உய்யக் கொள்ள வல்ல	நம்மை உஜ்ஜீவிக்கச் செய்யக்கூடிய		

பொய்மையைச் சுரக்கும் பொருளென்றது—பொய் தவிர வேறில்லாத அர்த்தம் என்றபடி. "ஸர்வம் அஸத்யம்" என்கிறவர்களை மதங்களிலே அறியலாகும். மெய்மையைப் புரக்குமிராமாநுசன் = "யதார்த்தம் ஸர்வவிஜ்ஞாநம்" என்று ஸ்தாபித்தருளினவர். புரத்தல்—காப்பாற்றுதல். ... ... (எ௯)

நல்லார்பரவுமிராமாநுசன் * திருநாமம் நம்ப
வல்லார்திறத்தை மறவாதவர்கள் யவர் * அவர்க்கே
எல்லாவிடத்திலு மென்றுமெப் போதிலுமெத்தொழும்பும் *
சொல்லால்மனத்தால் கருமத்தினால் செய்வன் சோர்வின்றியே. (அ௰)

நல்லார் பரவும் இராமாநுசன்	நல்லவர்களாலே கொண்டாடப்படுகிற பெருமையையுடைய (எம்பெருமானாருடைய)	எல்லா இடத்திலும்	எல்லா தேசங்களிலும்
		என்றும்	எல்லா அவஸ்தைகளிலும்
திருநாமம்	திருநாமத்தை	எப்போதிலும்	எல்லா காலங்களிலும்
நம்ப வல்லார் திறத்தை	(தங்களுக்குத் தஞ்சமாக) நம்பியிருக்க வல்லவர்களுடைய படிகளை	எத்தொழும்பும்	எல்லாவித கைங்கரியங்களையும்
மறவாதவர்கள் எவர்	மறவாமல் எப்போதும் சிந்திப்பவர்கள் யாரோ,	சொல்லால் மனத்தால் கருமத்தினால்	மனமொழி மெய்களென்னும் த்ரிகரணங்களாலும்
அவர்க்கே	அப்படிப்பட்ட ஸ்ரீராமாநுஜ பக்த பக்தர்களுக்கே	சோர்வு இன்றி செய்வன்	பிரியாதே இருந்து செய்வேன்.

* * *—தம்முடைய கீழ்நின்ற நிலைமையைப் போக்கின இவர், வந்தாலவரும் கொண்டிருப்பவரான எம்பெருமானாருடைய திருவடிகளையே அவர்களுக்குத் தஞ்சமாக நம்பியிருக்கிற பாகவதர்களையே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிற ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கே அடியேன் * இதில் காலமெல்லாம் உடலுள் பக்தி வழுவிலா அடிமைகள் செய்யக் கடவேன் என்கிறார். தொழும்பு = அடிமை. ... ... (௮௰)

சோர்வின்றியுன்றன் துணையடிக்கீழ் * தொண்டுபட்டவர்பால்
சார்வின்றிநின்ற வெனக்கு * அரங்கன்செய்ய தாளிணைகள்
பேர்வின்றியின்று பெறுத்த இராமாநுச வினியுன்
சீரொன்றிய கருணைக்கு * இல்லைமாறு தெரிவுறிலே (௮௧)

உன் தன் துணை அடிக்கீழ்	தேவரீருடைய உபய பாதங்களின் கீழ்	பேர்வு இன்றி பெறுத்த இராமாநுச	ஒருகாலும் விட்டு நீங்காதபடி சேரப் பெறுத்தவனாகச் செய்தருளின எம்பெருமானாரே!
சோர்வு இன்றி தொண்டு பட்டவர் பால்	சோராமல் அடிமைப் பட்டவர்கள் விஷயத்தில்	இனி	இப்படியான பின்பு
சார்வு இன்றி நின்ற எனக்கு	பொருந்தாமலே இருந்த எனக்கு	தெரிவுறில்	ஆராயுமளவில்
இன்று	இவ்வுலகத்திலேயே	உன்	தேவரீருடைய
அரங்கன் செய்ய தாள் இணைகள்	பெரிய பெருமாளுடைய சிவந்த திருவடியிணைகளை	சீர் ஒன்றிய கருணைக்கு மாறு இல்லை	சிறந்த திருவருளுக்கு ஒப்பு இல்லை.

தெரிவுற்றஞானம் செறியப்பெறாது * வெந் தீவினையால்
உருவற்றஞானத் துழல்கின்ற வென்னை * ஒருபொழுதில்
பொருவற்ற கேள்வியனாக்கி நின்றானென்ன புண்ணியனோ
தெரிவுற்றகீர்த்தி * இராமாநுசனென்னும் சீர்முகிலே. (௮௨)

தெரிவு உற்ற ஞானம் செறிய பெறாது	தெளிவான ஞானத்தைச் சேரப்பெறாமல்	பொருவு அற்ற கேள்வியன் ஆக்கி நின்றான்	ஒப்பற்ற பகவானின் ஞானமுடையவனாக்கின
வெம் தீவினையால்	கொடுமையான கருமங்களால்	தெரிவு உற்ற கீர்த்தி	ப்ரஸித்தமான புகழை யுடையவரும்
உரு அற்ற ஞானத்து உழல்கின்ற என்னை	உபயோகமற்ற ஞானமுடையவனாய் (அஞ்ஞானத்தில் அலைகின்றவனாய்) திரிந்த என்னை	சீர் முகில் என்னும்	(ஔதார்யத்தில்) சிறந்த மேகமென்னத் தக்கவருமான
ஒரு பொழுதில்	ஒரு க்ஷணகாலத்தில்	இராமாநுசன்	எம்பெருமானார்
		என்ன புண்ணியனோ	என்ன தார்மிகரோ? [ஒப்பற்ற தர்மிஷ்டரென்றபடி.]

சீர்கொண்டு பேரறம்செய்து * நல்வீடு செறிதுமென்னும்
பார்கொண்ட மேன்மையர் கூட்டனல்லேன் * உன்பதயுகமாம்
ஏர்கொண்ட வீட்டை யெளிதினிலெய்துவ னுன்னுடைய
கார்கொண்ட வண்மை * இராமாநுசா! இது கண்டுகொள்ளே. (௮௩)

இராமாநுச	எம்பெருமானாரே!	நல் வீடு செறிதும் என்னும்	பரம புருஷார்த்தமான மோக்ஷத்தை அடைந்திடுவோம் என்றிருக்கிற
சீர் கொண்டு	சமம் தமம் முதலிய குணங்களை உடையராய்	பார் கொண்ட மேன்மையர் கூட்டன் அல்லேன்	ப்ரஸித்தமான ப்ரபாவத்தையுடைய ப்ரபந்நர்களுடைய கோஷ்டியின் காலன் சேர்ந்தவனல்லேன்;
பேர் அறம் செய்து	சிறந்த தருமமாகிய ஞான யோகத்தை அநுஷ்டித்து		

உன் பதயுகம் ஆம்	தேவரீருடைய உபய பாதங்களாகிற	கார் கொண்ட	(வள்ளல்தன்மையில்) மேகத்தை வென்றிருக்கிற
ஏர் கொண்ட வீட்டை	பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தை	உன்னுடைய	தேவரீருடைய
எளிதினில் எய்துவன்	அநாயாஸமாக அடைந்திடுவேன்;	வண்மை இது	உதாரத்வம் இப்படிப்பட்டது;
		என்றிலொன்	தேவரீரே இதனைக்கண்டு கொள்ளலாம்.

[அடியேன் சொல்ல வேணுமோ?]

௯௨ :—சராசரலோகத்திலே கண்ணபிரான் பிறந்தபடியே நாம் சாஸ்த்ரங்களை அறுத்து விட்டோமானபடியால் அவற்றால் மோக்ஷம் கைப்படுத்துவிட்டோமென்று அறுதியிட்டிருக்கும் மஹான்களில் அடியேன் சேர்ந்தவனல்லேன்; அப்படி அடியேன் ஒன்றும் அநுஷ்டிக்கவில்லை. தேவரீருடைய திருவடிகளாகிற மோக்ஷத்தை அடைந்திடத் தடையில்லை யென்கிற மனவுறுதியே அடியேனுக்குள்ளது என்றருளிச்செய்தார். (௯௨)

கண்டுகொண்டே னெம்மிராமாநுசன்றன்னைக் காண்டலுமே *
தொண்டுகொண்டே னவன் தொண்டர்பொற்றாளில் * என் தொல்லை வெந்நோய்
விண்டுகொண்டே னவன் சீர்வெள்ளவாரியை வாய்மடுத் தின்று
உண்டுகொண்டேன் * இன்னமுற்றனவோதி லுலப்பில்லையே. (௯௩)

எம் இராமாநுசன் தன்னை	ஸ்வாமி எம்பெருமானாரை	விண்டு கொண்டேன்	நீக்கிக்கொண்டேன்;
இன்று கண்டு கொண்டேன்	இன்று (உள்ளபடி) தெரிந்து கொண்டேன்;	அவன் சீர் வெள்ளம் வாரியை	அவருடைய கல்யாண குணப்ரவாஹமாகிற கடலை
காண்டலுமே	இப்படி தெரிந்து கொண்ட வளவிலே	வாய் மடுத்து உண்டு கொண்டேன்	வாயார அநுபவிக்கப் பெற்றேன்;
அவன் தொண்டர் பொன் தாளில்	அவருடைய பக்தர்களுடைய அழகிய திருவடிகளில்	இன்னம் உற்றன	இப்படியாக இன்னமும் நான் பெற்ற நன்மைகளை
தொண்டு கொண்டேன்	அடிமைப்பட்டேன்; (அதனால்)	ஓதில்	சொல்லத்தொடங்கினால்
என் தொல்லை வெம் நோய்	என்னுடைய பழைய கொடு வினைகளை	உலப்பு இல்லை	(அதற்கு) ஒரு முடிவு கிடையாது.

௯௩ :—இனிமேலும் எம்பெருமானார் திருவருளால் நான் பெறப்போகிற நன்மைகள் அளவற உண்டு; இனிமேல் இன்றளவும் நான் பெற்ற பேறுகளுக்கு எல்லையுண்டோ வென்றருளிச்செய்தார். (௯௩)

ஓதியவேதத்தி னுட்பொருளாய் * அதனுச்சி மிக்க
சோதியை நாத னெனவறியா துழல்கின்ற தொண்டர் *
பேதைமைதீர்த்த இராமாநுசனைத் தொழும் பெரியோர்
பாதமல்லாலென்றன் னாருயிர்க்கு * யாதொன்றும் பற்றில்லையே. (௯௪)

ஓதிய வேதத்தின் உள் பொருள் ஆய்	அத்யயனம் பண்ணப்படுகிற வேதங்களின் உட்பொருளாயும்	அதன் உச்சி மிக்க சோதியை	அந்த வேதங்களின் முடிவாகிய உபநிஷத்துக்களிலே மிகவும் விளங்கும் ஜ்யோதிஸ்ஸான ஸ்ரீமந்நாராயணனை

ஆதல் என அறியாது { என்ற சொல்லைத் தெரிந்து கொள்ளாமல் | இராமாநுசனை தொழும் பெரியோர் பாதம் அல்லால் | எம்பெருமானாரை சேவிக்கின்ற மஹாத்மாக்களுடைய திருவடிகள் தவிர

உழல்கின்ற தொண்டர் { கண்ட விடங்களிலும் அடிமை செய்து திரிகின்றவர்களுடைய | என் தன் ஆர் உயிர்க்கு { எனது அருமையான ஆத்மாவுக்கு

பேதைமை தீர்த்த | அவிவேகத்தை போக்கடித்த | யாது ஒன்றும் பற்று இல்லை { வேறு எதுவும் புகலிடமில்லை.

* * * :—இப்பாட்டில் "அவன் சீர் வெள்ளவாரியை வாய்மடுத்து உண்டு கொண்டேன்" என்றும் "அவன் தொண்டர் பொற்றாளில் தொண்டு கொண்டேன்" என்றும் சொன்ன இரண்டு விஷயங்களுள் முதற்சொன்ன விஷயமே [அதாவது—ஸ்ரீராமாநுஜ பக்தர்களுக்கு பக்தனாயிருப்பதே] எனக்குச் சிறந்த உத்தேச்யமென்கிறார் இதில்.

வேதத்தின் நல்ல பொருள் என்றும் பிரிக்கலாம். ... ... (அரு)

பற்றா மனிசரைப்பற்றி * அப்பற்று விடாதவரே
உற்றாரென வுழன்றோடி நையேனினி * ஒள்ளியநூல்
கற்றார்பரவு மிராமாநுசனைக் கருது முள்ளம்
பெற்றாரெவர் * அவரெம்மை நின்றாளும் பெரியவரே. (அசு)

பற்றா மனிசரை பற்றி { உபயோகமற்ற மநுஷ்யர்களைப்பற்றி | ஒள்ளிய நூல் கற்றார் { சிறந்த சாஸ்த்ரங்களைக் கற்றவர்களாலே

அப் பற்று விடாது { அந்தப் பற்றுதலை விடாமல் | பரவும் இராமாநுசனை | கொண்டாடப்படுகிற எம்பெருமானாரை

அவரே உற்றார் என { அவர்களையே உறவினராகக்கொண்டு | கருதும் உள்ளம் பெற்றார் யாவர் { அநுசந்திக்கும்படியான நெஞ்சையுடையோர் யாவரோ,

உழன்று { அவர்கள் பின்னே அலைந்து | அவர் | அந்த மஹான்களே

ஓடி { அவர்களிட்ட காரியம் பண்ணச் செய்ய ஓடி | எம்மை

இனி நையேன் { இனிமேல் நைய மாட்டேன்; | நின்று ஆளும் பெரியவர் { சாச்வதமாக அடிமை கொள்ளும் மஹாத்மாக்கள்.

* ஒள்ளிய நூல்—"அடர்பிரு கருதி" என்றார் ஆழ்வாரும். (அசு)

பெரியவர்பேசிலும் பேதையர் பேசிலும் * தன்குணங்கட்கு
உரியசொல்லென்று முடையவனென்றென்று * உணர்வில் மிக்கோர்
தெரியும்வண்கீர்த்தி யிராமாநுசன் மறை தேர்ந்துலகில்
புரியுநன்ஞானம் * பொருந்ாதவரைப் பொரும் கலியே. (அஎ)

பெரியவர் பேசிலும் { ஞானசக்திகளால் நிறைந்த மஹான்கள் பேசினாலும் | உணர்வில் மிக்கோர் தெரியும் { சிறந்த ஞானிகள் அநுஸந்திக்கிற

பேதையர் பேசிலும் { ஒன்றுந் தெரியாதவர்கள் பேசினாலும் | வண் கீர்த்தி { திவ்யகீர்த்தியை யுடையரான

தன் குணங்கட்கு உரிய சொல் என்றும் உடையவன் என்று என்று { தனது திருக்குணங்களுக்கு ஏற்ற சொற்களை எப்போதும் உடையவ னென்று பலகாலுஞ் சொல்லி | இராமாநுசன் | எம்பெருமானார்

மறை தேர்ந்து | வேதங்களை ஆராய்ந்து

உலகில் | இவ்வுலகத்தில்

புரியும் | உபதேசித்தருளின

நல் ஞானம் பொருந்ாதவரை { நல்ல ஞானத்திற்சேராதவர்களை

கலி பொரும். | கலிபுருஷன் பீடிப்பன்.

* * *—இப்பாட்டில் கூறின அர்த்தமாவது: அனைத்துக் கலியின் கொடுமையினால் ஒரு காலத்திலும் பாதிக்கப்பட்டுப் போவேனென்று நினைக்கிறீர்களோ, அப்படி நினைக்க வேண்டா; இராமாநுஜனுடைய திருநாளில் கலிபுருஷன் ஒரு கொடுமையும் செய்யமுடியாதவன்; மற்றவர்களைத் தன் கலிபுருஷன் கெடுப்பன். என்று அர்த்தமாவது கெடுகாலமாயும் நினைத்தக் கூடியதென்றுபாயித்து.

[பெரியவர் பேசிலும் இத்யாதி] இதன் கருத்து யாதெனில்—எம்பெருமானாருடைய திருக் குணங்களை மஹா ஞானிகள் தாம் பேசி முடிக்கவல்லவர்கள்; அற்பஞானிகளும், அவ்வளவு பேச முடியாதென்று பின்வாங்கக் கூடியவர்கள்; என்பதில்லை; “ தம்மைப்பாரத் தமது சொல்லைத் தால் தமக்குத்தகுந்து நூசிப்ப ” என்றும் “ பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே வாச மணக்குழாய் மாலையான்—வாழ்வு ” என்றும் சொன்னதுபோல, பெரியோர் சொன்னாலும் சிறியோர் சொன்னாலும் அவரவர்களுடைய யோக்யதைக்குத் தக்கபடி சொல்லித் துதிக்கத் தகுந்தவர் எம்பெருமானார் என்று பெரியோர்கள் தெரிந்துகொண்டு, தாம் தமது சக்திக்குத் தக்கபடி ஸ்தோத்ரம் பண்ணுவோமென்று துதிக்கின்றார்களென்கை. அப்படி துதிக்கப்படு கின்ற எம்பெருமானார் உபதேசித்த ஞானத்தை அநுஷ்டித்து அவ்வுபதேசத்தின்படி நடப்பவர்களே ஸ்தோத்ரத்திலும் வருத்துவார்களென்றதாயித்து. ... ... (உஎ)

கலிமிக்க செந்நெல் கழனிக் குறையல் * கலைப்பெருமான்
ஒலிமிக்க பாடலையுண்டு தன்னுள்ளம் தடித்து * அதனால்
வலிமிக்கசீய மிராமாநுசன் மறைவாதியராம்
புலிமிக்கதென்று * இப்புவனத்தில் வந்தமை போற்றுவனே. (உஅ)

கலி மிக்க செந்நெல் கழனி	செல்வம் மிகுந்த செந்நெல்கழனிகளை யுடைய	தன் உள்ளம் தடித்து	தமது திருவுள்ளம் பூரித்து
குறையல்	திருக்குறையலூரில் அவதரித்தவராய்	அதனால் வலி மிக்க	அதனால் மிடுக்கு அதிகரித்து
கலை பெருமான்	சாஸ்த்ர மென்னும்படியான திவ்யப்ரபந்தங்களை யருளிச் செய்த பெருமையாய்த் திருமங்கையாழ்வாருடைய	சீயம் இராமாநுசன்	சிங்கம்போன்ற எம்பெருமானார்,
மிக்க ஒலி பாடலை	அதிசயித்த இசையையுடைய பெரிய திருமொழியை	மறை வாதியர் ஆம் புலி மிக்கது என்று இப் புவனத்தில் வந்தமை	வேதத்தில் அபார்த்தங்கள் பண்ணுகிற குத்ருஷ்டிகளாகிற புலிகள் அதிகமாய் விட்டனவென்று (அவற்றைத் தண்டிப்பதற்காக) இவ்வுலகில் அவதரித்த படியை
உண்டு	அநுபவித்து	போற்றுவன்	புகழ்ந்திடக் கடவேன்.

கலிமிக்க செந்நெற்கழனி—கலியாவது ஆரவாரம்; உழுவது நடுவது அறுப்பதாய்ச் செல்லுகிற கோலாஹலம். ... ... (உஅ)

போற்றரும் சீலத்திராமாநுச * நின்புகழ் தெரிந்து
சாற்றுவனேல் அதுதாழ்வது தீரில் * உன்சீர் தனக்கோர்
ஏற்றமென்றே கொண்டிருக்கிலும் என் மனமேத்தி யன்றி
ஆற்றகில்லாது * இதற்கென் நினைவாயென்றிட் டஞ்சுவனே. (உகூ)

போற்ற அரு சீலத்து	புகழ்ந்து தலைக்கட்டமுடியாத சீல குணத்தை உடைய	உன் சீர் தனக்கு ஓர் எல்லை	தேவரீருடைய திருக் குணங்களுக்கு ஓர் எல்லையானதும்
இராமாநுச	எம்பெருமானாரே ;	என்றே கொண்டு இருக்கில்	என்று நான் தெரிந்து கொண்டிருந்தாலும்
நின் புகழ்	தேவரீருடைய திருக்குணங்களை	என் மனம்	எனது நெஞ்சானது
தெரிந்து ஏத்துவனேல்	உணர்ந்து பேசுவேனாகில்	ஏத்தி அன்றி	(தேவரீருடைய திருக்குணங்களைப்) புகழ்ந்து அல்லது
அது	(சிறியனான நான்) பேசுகிற அது		
தாழ்வு	(தேவரீருக்கு) அவத்யமாம் ;	ஆற்றகில்லாது இது	தரித்திருக்க மாட்டாது ; இவ்விஷயத்திலே
அது இனி	அப்படி நான் பேசுவது தவிர்த்தால்	உன் சீலமோ என்றிட்டு அஞ்சுவன்	தேவரீர் என்ன சீலக்குறையோ என்று பயப் படுகிறேன்.

நினையார் பிறவியை நீக்கும் பிரானை * இந்நீணிலத்தே
எனையாள வந்த இராமாநுசனை * இருங்கவிகள்
புனையார் புனையும் பெரியவர் தாள்களில் பூந்தொடையல்
வனையார் * பிறப்பில் வருந்துவர் மாந்தர் மருள்சுரந்தே. (கூ0)

பிறவியை நீக்கும் பிரானை	ஸம்ஸாரத்தைப் போக்கும் உபகாரகராயும்	புனையும் பெரியவர் தாள்களில்	(அந்தப்பாசுரங்களைப்) பாடக்கேட்டுப் பூரிக்கிற மஹாத்மாக்களின் திருவடிகளில்
இந் நீள் நிலத்தே	இப்பெரிய பூமியிலே		
எனை ஆள	என்னை அடிமை கொள்வதற்கே	பூந் தொடையல் வனையார்	புஷ்ப மாலைகளை ஸமர்ப்பியாதவர்களான
வந்த	அவதரித்தவரான		
இராமாநுசனை	எம்பெருமானாரை	மாந்தர்	மனிதர்கள்
நினையார்	சிந்தியாதவர்களையும்,	மருள் சுரந்து	அஜ்ஞானம் அதிகமாகப் பெற்று
இரு கவிகள் புனையார்	(அவர் விஷயமாக) நல்ல பாடல்களைப் பாடாதவர்களையும்	பிறப்பில் வருந்துவர்	ஸம்ஸாரத்தில் கிடந்து துன்பப்படுவார்கள்.

* * *:—இப்பாட்டில் அங்கப்பேறு என்ற விஷயருடைய அச்சம் தீரும்படி குளிரக் கடாக்ஷித்தார் எம்பெருமானார் ; அந்தக் கடாக்ஷ வைபவத்தாலே அச்சம் தீரப்பெற்றுத் தேறுதலடைந்து, மற்ற வாக்யங்களில் ஏதேனுமொன்றால் எம்பெருமானார் விஷயத்தில் ஒரு நன்மை செய்து வாழ்ந்துபோகலாமாயிருக்க, பாவிகள் அதுசெய்யாதே பாழாய்ப்போகிறார்களே ! என்று அநுதபிக்கிறார் இதில். கூ0

மருள் சுரந்தாகம வாதியர் கூறும் * அவப்பொருளாம்
இருள் சுரந்தெய்த்த வுலகிருள் நீங்க * தன்னீண்டியசீர்
அருள் சுரந்தெல்லா வுயிர்கட்கும் நாத னரங்கனென்னும்
பொருள் சுரந்தான் * எம் மிராமாநுசன் மிக்கபுண்ணியனே. (கூக)

	(வேதபாஹ்ய) ஆகமத்தைப் பிரமாண	அவம் பொருள் ஆம் இருள் சுரந்து	நீசமான அர்த்தங்களாகிற இருள் மிகுந்து (அதனால்)
ஆகம வாதியர்	மாகக் கொண்டு வாதம் பண்ணுகிற பாசுபதர்கள்	எய்த்த	கெட்டுப்போன
		உலகு	உலகத்தவர்களுடைய
மருள் சுரந்து	அஜ்ஞானம் அதிகரிக்கப் பெற்று	இருள்	அஜ்ஞானாந்தகாரமானது
		நீங்க	போகும்படியாக
கூறும்	(வேதத்துக்குப்) பொருந்தாத விஷயமாகச் சொல்லுகிற	தன்	தம்முடைய
		ஈண்டிய சீர் அருள் சுரந்து	மிகவும் நிறைந்த கருணையைப் பெருக்கி

எல்லா உயிர்கட்கும் காதன் அரங்கன் என்னும் பொருள்	'எல்லாப் பிராணிகளுக்கும் ஸ்வாமி ஸ்ரீரங்கநாதனே' என்கிற அர்த்தத்தை	காத்தான் எம் இராமாநுசன் மிக்க புண்ணியன்	வெளியிட்டவரான எம்பெருமானார் சிறந்த புண்யாத்மா.

* * *:—இந்த ஸம்ஸாரிகள் இப்படி விமுகராயிருக்கச் செய்தேயும் இவர்களைத் தம்பேறாக உஜ்ஜீவிக்கச் செய்வதற்காக எம்பெருமானார் முயன்றதைச் சிந்தித்து அவரைக் கொண்டாடுகிறார்.

மிக்க புண்ணியனான எம்இராமாநுசன்..........பொருள் காத்தான் என்றும், பொருள் காத்தவனான எம்இராமாநுசன் மிக்க புண்ணியன் என்றும் இரண்டுபடியும் யோஜிக்கலாம். (௯௧)

புண்ணியநோன்பு புரிந்துமிலேன் * அடிபோற்றி செய்யும்
நுண்ணருங்கேள்வி நவின்றுமிலேன் * செம்மைநூற் புலவர்க்கு
எண்ணருங்கீர்த்தி இராமாநுச இன்று நீபுகுந்தென்
கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் * நின்ற இக்காரணம் கட்டுரையே. (௯௨)

செம்மை நூல் புலவர்க்கு	செவ்வையான சாஸ்திரங்களில் கரை கண்டவர்களுக்கும்	நுண் அரு கேள்வி	ஸூக்ஷ்மமாய் அருமையான ச்ரவணத்தை
எண் அரு கீர்த்தி	அளவிட முடியாத கீர்த்தியையுடைய	நவின்றும் இலேன்	(செய்யாதே ஒருபொழுது வாயாலே) சொல்லவுமில்லை. (அப்படியிருக்கவும்)
இராமாநுச	எம்பெருமானாரே!	இன்று	இன்று
புண்ணியம் நோன்பு புரிந்தும் இலேன்	புண்ணியமான ஒரு விரத நிஷ்டையும் அநுஷ்டிக்கவில்லை;	நீ என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும்	அடியேனுடைய கண்ணிலும் நெஞ்சிலும்
அடி போற்றி செய்யும்	(தேவரீருடைய) திருவடிகளை வாழ்த்துவதற்கு உறுப்பான	புகுந்து நின்ற இக் காரணம் கட்டுரை	புகுந்து ஸ்தாவரமாயிருப்பதற்குக் காரணம் அருளிச்செய்யவேணும்.

கட்டப்பொருளை மறைப்பொருளென்று * கயவர் சொல்லும்
பெட்டைக்கெடுக்கும் பிரானல்லனோ * என் பெருவினையைக்
கிட்டிக்கிழங்கொடு தன்னருளென்னு மொள்வா ளுருவி
வெட்டிக்களைந்த * இராமாநுச னென்னும் மெய்த்தவனே. (௯௩)

கிட்டி	அடியோடு பற்றிக் நெருங்கி		(எப்படிப்பட்டவரென்றால்)
		கயவர்	அற்பர்களான குத்ருஷ்டிகள்
தன் அருள் என்னும் ஒள்வாள் உருவி	தம்முடைய கிருபையாகிற சிறந்த வாளை உருவி (அதனால்)	கட்டம் பொருளை மறை பொருள் என்று சொல்லும் பெட்டை	தப்பான அர்த்தங்களை வேதார்த்தமாகக் கொண்டு சொல்லுகிற பிரட்டுப் பேச்சுகளை
என் பெரு வினையைக் கிழங்கொடு வெட்டிக் களைந்த	என்னுடைய பாபங்களை வேரோடே அறுத்துத் தொலைத்த	கெடுக்கும் பிரான் அல்லனோ	ஒழித்துவிடுகிற மஹோபகாரகரன்றோ.
இராமாநுசன் என்னும் மெய் தவன்	எம்பெருமானாரென்கிற அருந்தவசியர்		

கட்டம்—கஷ்டம்; கட்டப்பொருளென்றது கஷ்டப்பட்டுச் சொல்லும் பொருள் என்றபடி; மதாந்தரஸ்தர்கள் சொல்லும் பொருள்கள் அஸம்பாவிதங்களாயிருக்குமென்க. கயவர்—நீசர், அற்பர். பெட்டு = பிறரை வஞ்சிக்கச் சொல்லும் பொய்ப்பேச்சு. மெய்த்தவன்— தவமாவது சரணாகதியாகும். (௯௩)

தவந்தரும் செல்வம் தகவுந்தரும் * சலியாப்பிறவிப்
பவந்தருந் தீவினை பாற்றித்தரும் * பரந்தாமமென்னும்
திவந்தரும் தீதில் இராமாநுசன் தன்னைச் சார்ந்தவர்கட்கு
உவந்தருந்தேன் * அவன்சீரன்றி யானொன்றும் உள்மகிழ்ந்தே. (கூச)

தீதில் இராமாநுசன்	எவ்வகைக் குற்றமும் அற்றவரான எம்பெருமானார்	பாற்றி தரும்	போக்கடித்தருள்வர்;
தன்னை சார்ந்தவர்கட்கு	தம்மை அடைந்தவர்களுக்கு	பரம் தாமம் என்னும் திவம் தரும்	பரமபதமென்று சொல்லப்படுகிற லோகத்தை அளிப்பர்; (ஆனபின்பு)
தவம் தரும்	சரணாகதி நிஷ்டையைக் கொடுத்தருள்வர்;	யான்	அடியேன்
செல்வும் தகவும் தரும்	பக்தியாகிற செல்வத்தையும் தமது அருளையும் கொடுத்தருள்வர்;	அவன் சீர் அன்றி	அவ்வெம்பெருமானாருடைய திருக்குணங்களைத் தவிர்த்து
		ஒன்றும்	வேறொன்றையும்
சலியா பிறவி பவம் தரும் தீவினை	நிவர்த்திக்க முடியாததும் ஸம்ஸாரத்தை உண்டாக்குகின்றதுமான பாவங்களை	உள் மகிழ்ந்து உவந்து அருந்தேன்	மனம் களித்து விரும்பி அநுபவிக்க மாட்டேன்.

இப்பாட்டில், தரும் என்னும் பதம் ஆறு இடங்களில் வருகின்றது. இரண்டாமடியின் முதலிலுள்ள தரும் என்பது மாத்திரம் தீவினைக்கு விசேஷணம்; மற்ற ஏனையவை எம்பெருமானார் பக்கல் அந்வயிக்கும் வினைமுற்றுக்கள்.

* சலியாப்பிறவி, சலியாப்பிறவி" என்பன பாடபேதங்கள். பவம்—வடசொல். பரந்தாமம்—வடசொல். திவம்—வடசொல் விகாரம். (கூச)

உண்ணின் றுயிர்களுக் குற்றனவேசெய்து * அவர்க்குயவே
பண்ணும் பரனும் பரிவிலனாம்படி * பல்லுயிர்க்கும்
விண்ணின் தலைநின்று வீடளிப்பானெம் இராமாநுசன் *
மண்ணின் தலத்துதித்து * உய்மறைநாலும் வளர்த்தனனே. (கூரு)

உயிர்களுக்கு உள் நின்று	எல்லா ஆத்மாக்களுக்கும் அந்தர்யாமியாய் இருந்து கொண்டு	பல் உயிர்க்கும்	எல்லா ஆத்மாக்களுக்கும்
உற்றனவே செய்து	[illegible]	வீடு அளிப்பான்	மோக்ஷத்தை அருள்வதற்காக
அவர்க்கு	அந்த ஆத்மாக்களுக்கு	எம் இராமாநுசன்	எமது எம்பெருமானார்
உயவே பண்ணும் பரனும்	உஜ்ஜீவனத்தையே பண்ணிக்கொண்டிருக்கிற எம்பெருமானும்	விண்ணின் தலை நின்று	ஸ்ரீவைகுண்டத்தில் நின்றும்
	([illegible])	மண்ணின் தலத்து உதித்து	இப்பூதலத்திலே அவதரித்து
பரிவிலனாம் படி	[illegible]	உய் மறை நாலும்	எல்லோர்க்கும் உஜ்ஜீவன சாதனமான வேதங்களையும்
		வளர்த்தனன்	குறைவின்றி வளரச்செய்தருளினார்.

* இப்பாட்டின் கருத்தை "மண்ணின் தலத்துதித்து மறை நாலும் வளர்த்தனனே" என் [illegible] "[illegible]" என்ற கட்டளைக் கலித்துறையின் இலக்கணப்படி [illegible] "[illegible]" என்கிற [illegible]

[illegible] "...[illegible]" [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] * [illegible] [illegible]. ... ... [illegible]

வளரும்பிணிகொண்ட வல்வினையால் * மிக்க நல்வினையில்
கிளருந்துணிவு கிடைத்தறியாது * முடைத்தலையூன்
தளருமளவும் தரித்தும் விழுந்தும் தனிதிரிவேற்கு
உளரெம்மிறைவர் * இராமாநுசன் றன்னை யுற்றவரே. (கூசா)

வளரும் பிணி கொண்ட வல்வினையால்	[illegible]	தரித்தும் விழுந்தும்	[illegible]
மிக்க நல் வினையில்	[illegible]	தனி திரிவேற்கு	[illegible]
கிளரும் துணிவு கிடைத்தறியாது	[illegible]	இறைவர்	[illegible]
முடைத்தலை ஊன் தளரும் அளவும்	[illegible]	எம் இராமாநுசன் தன்னை உற்றவர்	[illegible]
		உளர்	[illegible]

தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் * மன்னு தாமரைத்தாள்
தன்னையுற்றாட்செய்ய வென்னையுற்றா னின்று * தன்தகவால்
தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லை யென்றறிந்து
தன்னையுற்றாரை * இராமாநுசன் குணஞ் சாற்றிடுமே. (கூஎ)

இராமாநுசன்	[illegible]	இன்று	[illegible]
		தன் தகவால்	[illegible]
தன்னை உற்றார் அன்றி தன்னை உற்றாரை குணம் சாற்றிடும் தன்மை உற்றார் இல்லை என்று அறிந்து	[illegible]	தன்னை உற்று ஆட்செய்யும் தன்மையினோர்	[illegible]
		மன்னு தாமரை தாள் தன்னை உற்று ஆட்செய்ய	[illegible]
என்னை	[illegible]	உற்றான்	[illegible]

* * * [illegible] [illegible] [illegible]? [illegible] [illegible]; [illegible] [illegible].

இப்பாட்டின் அந்வயக்ரமம் [illegible]; [illegible] தன்னையுற்றாரன்றித் தன்மையுற்றாரில்லை என்றறிந்து, இராமாநுசன், தன்னையுற்றாட்செய்யும் தன்மையினோர் மன்னு தாமரைத்தாள் தன்னையுற்றாட்செய்யத் தன் தகவால் இன்று என்னையுற்றான் [illegible].

சாஸ்திரமும் என்பிற விசேஷணமுடையான் பாட்டின் முடிவில் வந்து நின்றதை அபூர்வப் பிரயோக மென்பர், என்னேயுற்றான் என்று ஆசிரியர்கள். ... ... (௯௭)

இடுமேயினிய சுவர்க்கத்தில் * இன்னம் நரகிலிட்டுச்
சுடுமேயவற்றைத் தொடர்தரு தொல்லை * சுழல்பிறப்பில்
நடுமேயினிநம் இராமாநுசன் நம்மை நம்வசத்தே
விடுமேசரண மென்றால் * மனமேஐயல் மேவுதற்கே. (௯௮)

நம் இராமாநுசன் — நம் எம்பெருமானார்,
சரணம் என்றால் — உமது திருவடிகளை சரணமென்று நாம் சொன்னால் விட்டுவிடமாட்டார்
இனிய சுவர்க்கத்தில் இடுமே — (இவர் நம்மை) இனிதாகத் தோற்றுகிற ஸ்வர்க்கத்திலே நம்மைக் கொண்டு சேர்த்திடுவரோ?
இன்னம் — அல்லது
நரகில் இட்டு சுடுமே — நரகத்திலே கொண்டு தள்ளி தஹிக்கச் செய்வரோ?
அவற்றை தொடர்தரு — அந்த ஸ்வர்க்க நரகங்களைத் தொடர்ந்து கிடக்கிற
தொல்லை சுழல் பிறப்பில் — அநாதியாயும் சுழன்று வருவதாயுமுள்ள ஜன்மத்திலே
நடுமே — நிறுத்துவரோ?
இனி — மேலுள்ள காலங்களில்
நம்மை — நம்மை
நம் வசத்தே விடுமே — நாம்போனவழியே போகவிட்டு வைப்பரோ?
(இவை செய்யமாட்டாரான பின்பு)
மனமே! — நெஞ்சே!
மேவுதற்கு ஐயல் — பேறுபெறும் விஷயமாக நீ ஸந்தேகிக்கவேண்டா.

ஐயல்—முன்னிலை யெதிர்மறை வினைமுற்று. ஐயாதே என்றபடி. (௯௮)

தற்கச் சமணரும் சாக்கியப்பேய்களும் * தாழ்சடையோன்
சொற்கற்ற சோம்பரும் சூனியவாதரும் * நான்மறையும்
நிற்கக் குறும்புசெய் நீசரும்மாண்டனர் நீணிலத்தே
பொற்கற்பகம் * எம்மிராமாநுச முனி போந்தபின்னே. (௯௯)

தற்கம் சமணரும் — தர்க்கம் பண்ணுகிற சமணர்களும்
பேய் — பேய்போலே பிடித்தபிடி விடாதே நிற்கிற
சாக்கியர்களும் — பௌத்தர்களும்
தாழ் சடையோன் சொல் கற்ற சோம்பரும் — ருத்ரனுடைய சொல்லாகிய சைவாகமத்தைக் கற்ற தாமஸர்களான சைவர்களும்
சூனிய வாதரும் — சூன்யவாதிகளும்
நான் மறையும் நிற்க — நான்கு வேதங்களும் விளங்கி நிற்கச்செய்தே
குறும்பு செய் நீசரும் — (அவற்றுக்குச் சேராத) அபார்த்தங்களைப் பண்ணுகிற குத்ருஷ்டிகளும்
மாண்டனர் — ஒழிந்தார்கள்; (எப்போது? என்றால்)
பொன் கற்பகம் எம் இராமாநுச முனி — சிறந்த கல்ப வ்ருக்ஷம் போலே உதாரராய் எமக்கு ஸ்வாமியான எம்பெருமானார்
நீள் நிலத்தே போந்த பின் — விசாலமான இப்பூமியிலே திருவவதரித்த பின்பு.

போந்ததென்னெஞ்சென்னும்பொன்வண்டு * உனதடிப்போதில் ஒண்சீர்
ஆந்தெளிதேனுண் டமர்ந்திட வேண்டி * நின்பாலதுவே
ஈந்திடவேண்டு மிராமாநுச இதுவன்றி யொன்றும்
மாந்தகில்லாது * இனி மற்றொன்றுகாட்டி மயக்கிடவே. (௱)

இராமாநுச	எம்பெருமானாரே!	ஈந்திட வேண்டும்	அளித்தருள வேணும்;
என் நெஞ்சு என்னும் பொன் வண்டு	என்னுடைய நெஞ்சாகிற அழகிய வண்டானது	இது அன்றி	இத்திருவடிகளை அன்றி
உனது அடிப் போதில்	தேவரீருடைய திருவடித் தாமரைகளில்	ஒன்றும்	வேறொன்றையும்
ஒண் சீர் ஆம் தெளி தேன் உண்டு அமர்ந்திட வேண்டி	அழகிய குணங்களாகிற தெளிவான தேனைப்பருகி நித்யானுபவம் பண்ணுவதை விரும்பி	மாந்தகில்லாது	(நெஞ்சு) புசிக்க மாட்டாது;
நின் பால்	தேவரீரிடத்தில்	இனி	இப்படியான பின்பு
பொருந்தும்	வந்து சேர்ந்தது;	மற்று ஒன்று காட்டி	வேறொரு விஷயத்தைக் காட்டி
அதுவே	அத்திருவடிகளிலேயே	மயக்கிடல்	மயக்கவேண்டா.

* * *—எம்பெருமானே! அடியேனுடைய நெஞ்சு தேவரீருடைய திருவடிகளையே எப்போதும் அநுபவிக்க விரும்பிக்கொண்டு மேல்விழுந்து தேவரீரிடம் வந்து சேர்ந்தது. இது இனி வேறொன்றை விரும்பாது; தேவரீரும் இனி இதை ஸம்ஸாரத்தில் போகவொட்டாமல் தேவரீரிடத்திலேயே நிலைநிறுத்திக் கொள்ளவேணும், என்றாராயிற்று.

தமது நெஞ்சை ஒரு வண்டாக ரூபணம் பண்ணினதற்கு ஏற்ப எம்பெருமானாருடைய திருவடிகளைத் தாமரையாக ரூபணம் பண்ணினார். இந்த வண்டுக்கு அந்தத் தேன் தவிர வேறொன்றும் ருசிக்கமாட்டாது.

மயக்கிடல் = முன்னிலை எதிர்மறை வினைமுற்று. மயக்காதே என்றபடி. (௧௦௦)

மயக்கும் இருவினை வல்லியிற் பூண்டு * மதிமயங்கித்
துவக்கும் பிறவியில் தோன்றியவென்னை * துயரகற்றி *
உயக்கொண்டு நல்கு மிராமாநுசவென்ற துன்னை யுன்னி
நயக்குமவர்க் கிதிழுக்கென்பர் * நல்லவரென்று நைந்தே. (௧௦௧)

மயக்கும்	"அஜ்ஞானத்தை விளைக்க வல்ல	நல்கும் இராமாநுச	அருள் செய்கின்ற எம்பெருமானாரே!"
இரு வினை	புண்ய பாபமென்னும் இரு கருமங்களாகிற	என்றது இது	என்று தேவரீருடைய பாவனத்வத்தைப் பேசுவதாகிற இது
வல்லியில்	விலங்கில்		
பூண்டு	அகப்பட்டுக் கொண்டு	உன்னை உன்னி	தேவரீரை அநுபவித்து உகந்து
மதி மயங்கி	அறிவிழந்து		
துவக்கும்	பந்திக்கச் செய்கிற	நயக்கும் அவர்க்கு	எப்போதும் ஆசைப்படுகிறவர்களுக்கு
பிறவியில்	ஸம்ஸாரத்திலே		
தோன்றிய என்னை	பிறந்த அடியேனை	இழுக்கு என்பர் நல்லவர்	தாழ்வு என்று மேலோர்கள் சொல்லுவார்கள்.
துயர் அகற்றி உய் கொண்டு	துக்கங்களைப் போக்கி உஜ்ஜீவிக்கச் செய்து		

* * *—எம்பெருமானாருக்கு, பாவநத்வம் என்றும் போக்யத்வம் என்றும் இரண்டு குணங்கள் உண்டு. பாவநத்வமாவது—பக்தர்களுடைய பாவங்களைப் போக்கிப் பரிசுத்தப்படுத்தல். போக்யத்வமாவது எப்போதும் அநுபவிக்கக் கூடியவராயிருக்கை. இவ்விரண்டில் பாவநத்வத்தைவிட போக்யத்வமே சிறந்தது; ஏனென்றால், தம்முடைய பாவங்களைப் போக்குகின்றவர் என்ற காரணத்தாலே நாம் அவரைப் பாவனர் என்று அநுஸந்திக்கவேண்டும்; இது ஒரு உபாதியைப் பற்றி வருவது; போக்யத்வத்தை அநுஸந்திப்பது இப்படிப்பட்டதல்ல. அது ஸ்வரூபப்ராப்தம். ஆகையாலே, பாவநத்வத்தை அநுஸந்திப்பதைவிட போக்யத்தை அநுஸந்திப்பதே சிறந்தது. அப்படியிருக்க இவ்வமுதனார் இப்பாசுரத்தில் அடிக்கடி எம்பெருமானாருடைய பாவநத்வத்தை அநுஸந்தித்தார்; 'என்னுடைய பாவங்களையெல்லாம் போக்கினார், என்று

டைய குற்றங்களையெல்லாம் தீர்க்கிறார்' என்று அடிக்கடி சொல்லியிருக்கிறார். அப்படி சொன்னதற்கு ஆசைப்படுகிறார் இப்பாட்டில். போக்யதையில் ஈடுபட்டுப் பேசவேண்டியிருக்க, பாவகத்வத்தில் ஈடுபட்டதை நோற்றப் பேசினது ஏதோ என்று பெரியோர்கள் சொல்லுவர்கள் என்றதாயிற்று. (௧0௧)

நையும் மனமுன் குணங்களையுன்னி * என்னாவிருந்தெம்
ஐய னிராமாநுச னென்றழைக்கும் * அருவினையேன்
கையும் தொழும் கண்கருதிடுங்காணக் கடல்புடைசூழ்
வையமிதனில் * உன்வண்மை யென்பாலென் வளர்ந்ததுவே. (௧0௨)

(எம்பெருமானாரே!)

மனம்	எனது நெஞ்சானது	தொழும்	அஞ்சலி பண்ணுகின்றன;
உன் குணங்களை உன்னி	தேவரீருடைய திருக்குணங்களைச் சிந்தித்து	கண்	கண்களானவை
நையும்	கரைகின்றது;	காண கருதிடும்	(தேவரீரை) சேவிக்க ஆசைப்படுகின்றன;
என் நா	எனது வாக்கானது	கடல்புடை சூழ் வையம் இதனில்	சமுத்திரம் சூழப்பெற்ற இப்பூமண்டலத்திலுள்ளே
இருந்து	நிலைநின்று	உன் வண்மை	தேவரீருடைய ஔதார்ய குணம்
எம் ஐயன் இராமாநுசன் என்று அழைக்கும்	எமக்கு ஸ்வாமியான எம்பெருமானாரே! என்று அழைக்கின்றது.	என்பால் வளர்ந்தது என்	அடியேன் மீது (இவ்விதமாக) வளர்ந்ததற்குக் காரணம் யாதோ?
அருவினையேன்	மஹாபாபியான என்னுடைய		
கையும்	கைகளும்		

வளர்ந்தவெங்கோப மடங்கலொன்றாய் * அன்று வாளவுணன்
கிளர்ந்தபொன்னாகம் கிழித்தவன் * கீர்த்திப் பயிரெழுந்து
விளைந்திடும்சிந்தை யிராமாநுச னென்றன் மெய்வினைநோய்
களைந்து நன்ஞானமளித்தனன் * கையில் கனியென்னவே. (௧0௩)

அன்று	முன்னொரு காலத்தில்	கீர்த்தி பயிர் எழுந்து	திருப்புகழ்களாகிற பயிர் வளர்ந்து
வளர்ந்த வெம் கோபம் மடங்கல் ஒன்று ஆய்	அபரிமிதமான கோபம் மேலிட்டுப்பெற்ற ஒரு சிங்க மூர்த்தியாகி	விளைந்திடும் சிந்தை	விளையப்பெற்ற திருவுள்ளத்தை யுடையரான
வாள் அவுணன்	வாளையுடைய அசுரனான ஹிரணியனது	இராமாநுசன்	எம்பெருமானார்
கிளர்ந்த	செருக்கினால் செழித்திருந்த	என் தன் மெய் வினை நோய் களைந்து	எனது உடலைப்பற்றியிருக்கிற வினைநோய்களையெல்லாம் ஒழித்து
பொன் ஆகம்	பொன்போன்ற மார்பை	கையில் கனி என்ன	கையிலங்கு நெல்லிக்கனி போலே ஸ்பஷ்டமாக
கிழித்தவன்	கிழித்துப் போட்டவனான எம்பெருமானுடைய	நல் ஞானம் அளித்தனன்	விலக்ஷணமான ஞானத்தை தந்தருளினார்.

கையில்கனியென்னக் கண்ணனைக் காட்டித்தரிலும் * உன்தன்
மெய்யில்பிறங்கிய சீரன்றி வேண்டிலன் யான் * நிரயத்
தொய்யில்கிடக்கிலும் சோதிவிண் சேரிலும் இவ்வருள் நீ
செய்யில்தரிப்பன் * இராமாநுச என்செழுங் கொண்டலே. (௧0௪)

செழுங் கொண்டல்	(ஔதார்யத்தில்) விலக்ஷணமான மேகம் போன்ற	நிரயம் தொய்யில் கிடக்கினும்	ஸம்ஸார ஸாகரத்தில் அழுந்திக் கிடந்தாலும்
என் இராமாநுச	எம்பெருமானாரே! (தேவரீர்)	சோதி விண் சேரினும்	சோதிமயமான பரமபதத்தை அடைந்தாலும்
கண்ணனை	எம்பெருமானை		
கையில் கனி என்ன	உள்ளங்கை நெல்லிக் கனிபோலே	இவ் அருள்	(தேவரீருடைய திருமேனியழகை அநுபவித்து இருக்கைக்கு உறுப்பான) இவ்வருளை
காட்டித் தரினும்	காட்டிக் கொடுத்தாலும்		
உன் தன் மெய்யில் பிறங்கிய சீர் அன்றி யான் வேண்டிலன்	தேவரீருடைய திருமேனியில் விளங்குகிற சௌந்தர்யம் முதலிய குணங்களைத் தவிர வேறொன்றிலும் நான் ஆசைவைக்கமாட்டேன்;	நீ செய்யில்	தேவரீர் செய்தருளினால் தான்
		தரிப்பன்	ஸம்ஸாரத்திலோ [illegible]) கால் பாவியிருப்பேன்.

நிரயத்தொய்யில்—நிரயமாவது நரகம். இந்த ஸம்ஸாரமே நரகமெனப்படும். தொய்யில்—சேறு. [illegible] தொக்கி நிற்கிறது. தொய்யம் என்பாருமுளர். ... ... (கoச)

செழுந்திரைப் பாற்கடல் கண்டுயில் மாயன் * திருவடிக்கீழ்
விழுந்திருப்பார் நெஞ்சில் மேவுநன் ஞானி * நல்வேதியர்கள்
தொழுந்திருப் பாத னிராமாநுசனைத் தொழும்பெரியோர்
எழுந்திரைத் தாடுமிடம் * அடியேனுக் கிருப்பிடமே. (கoரு)

செழு திரை பால் கடல்	அழகிய அலைகளையுடைய திருப்பாற் கடலில்	நல் வேதியர்கள் தொழும் திரு பாதன்	நல்ல வைதிகர்களால் ஸேவிக்கப்பட்ட திருவடிகளையுடையவரா யிருக்கின்ற
கண் துயில்	பள்ளிகொண்டருளுகின்ற		
மாயன்	ஸர்வேச்வரனுடைய	இராமாநுசனை	எம்பெருமானாரை
திரு அடி கீழ்	திருவடிகளின் கீழ்	தொழும்	ஸேவிக்கின்ற
விழுந்து இருப்பார்	விழுந்து கிடக்கும் மஹான்களுடைய	பெரியோர்	மஹாத்மாக்கள்
நெஞ்சில் மேவும்	திருவுள்ளத்திலே பொருந்தி எழுந்தருளியிருக்கிற	எழுந்து இரைத்து ஆடும் இடம்	கட்டுப் இருந்த விடத்தில் இராமல் எழுந்து கோஷித்துக்கொண்டு கூத்தாடும் இடம்
நல் ஞானி	சிறந்த ஞானியாயும்	அடியேனுக்கு இருப்பு இடம்	அடியேன் வசிக்குமிடமாகும்.

* * * :—இப்பாட்டில் "நிரயத் தொய்யில் கிடக்கினும் சோதிவிண் சேரினும்" என்று ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் வாசியற்றதாகச் சொன்ன அமுதனாரை நோக்கிச் சிலர், 'உலகத்தில் எல்லாரும் ஸம்ஸாரத்தை வெறுத்தும் பரமபதத்தை ஆசைப்பட்டும் இருக்க நீர் ஸம்ஸாரத்தையும் பரமபதத்தையும் ஸமமாகக் கருதிப் பேசுகின்றீரே, உமக்கு உத்தேச்யமான ஸ்தானம் எது? சொல்லும்' என்ன; ஸ்ரீராமாநுஜபக்தர்கள் களித்துக் கூத்தாடுகின்ற இடமே எனக்குப் பரமோத்தேச்யமான ஸ்தானம் என்றார். (கoரு)

[சாற்றுப் பாசுரங்கள்.]

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம் * மாலிருஞ்சோலையென்னும்
பொருப்பிடம் மாயனுக் கென்பர் நல்லோர் * அவைதன்னொடும் வந்
திருப்பிடம் மாய னிராமாநுசன்மனத் தின்றவன்வந்
திருப்பிடம் * என்ற னிதயத்துள்ளே தனக்கின்புறவே. (கoசு)

மாயனுக்கு	ஸர்வேச்வரனுக்கு	அவை தன்னொடும் வந்து இருப்பிடம்	அந்த ஸ்தலங்களுடன் கூடியவனாய்க் கொண்டு எழுந்தருளி யிருப்பது
இருப்பு இடம்	வாஸஸ்தானம் (எவை யென்றால்)		
வைகுந்தம்	பரமபதமும்		
வேங்கடம்	திருவேங்கடமலையும்	இராமாநுசன் மனத்து	எம்பெருமானாருடைய திருவுள்ளத்திலேயாம்;
மாலிருஞ் சோலை என்னும் பொருப்பு இடம்	திருமாலிருஞ்சோலை யென்கிற திருமலையும் (ஆகிய இவையாம்)	அவன், இன்று வந்து	அவ்வெம்பெருமானார்தாம் இப்போது வந்து
என்பர் நல்லோர்	என்று ஸத்துக்கள் சொல்லுவார்கள்.	தனக்கு இன்பு உற இருப்பிடம்	தமக்கு ஆநந்தமாக எழுந்தருளி யிருப்பது
மாயன்	(இவற்றை இருப்பிடமாகவுடைய) ஸர்வேச்வரன்	என் தன் இதயத்துள்ளே	அடியேனுடைய நெஞ்சிலேயாம்.

••• அவ—இப்பாட்டிற் கீழ்ப்பாட்டிலே அமுதனாருடைய எல்லை கடந்த ப்ராவண்யத்தை அறிந்த எம்பெருமானார் 'நம்மேல் இவ்வளவு காதல்கொண்டிருக்கிற இவருடைய நெஞ்சை நாம் விட்டு நீங்கலாகாது' என்று கொண்டு அமுதனாருடைய திருவுள்ளத்தை மிகவும் விரும்பினபடியை, அமுதனார் கண்டு மகிழ்ந்து பேசுகிறார். (க0௬)

இன்புற்றசீலத் திராமாநுசா * என்று மெவ்விடத்தும்
என்புற்றநோ யுடல்தோறும் பிறந்திறந்து * எண்ணரிய
துன்புற்று வீயினும்சொல்லுவ தொன்றுண்டுன் தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி * என்னையாக்கியங் காட்படுத்தே (க0௭)

இன்பு உற்ற	ஆநந்தபூர்ணராய் எழுந்தருளியிருக்கிற	எண் அரிய துன்பு உற்று வீயினும்	எண்ண முடியாத துன்பங்களை யநுபவித்து முடிந்து போனாலும்
சீலத்து இராமாநுசா	ஸௌசீல்யகுணமுடைய எம்பெருமானாரே!	என்றும்	எல்லாக்காலங்களிலும்
		எவ்விடத்தும்	எல்லாவிடங்களிலும்
சொல்லுவது ஒன்று உண்டு	தேவரீரிடத்தில் அடியேன் விண்ணப்பிக்க வேண்டிய விஷயம் ஒன்றுண்டு (அது என்னவென்றால்)	உன் தொண்டர்கட்கே	தேவரீருடைய பக்தர்கள் விஷயத்திலேயே
		அன்பு உற்று இருக்கும்படி என்னை ஆக்கி	பக்தனாயிருக்கும்படி அடியேனைச் செய்தருளி
என்பு உற்ற நோய் உடல் தோறும்	எலும்பிலே ஊடுருவக் கூடிய வியாதிகளுக்கு இருப்பிடமான சரீரங்களிலெல்லாம்	அங்கு ஆட்படுத்து	அந்த பக்தர்களிடத்தில் (அடியேனை) ஆட்படுத்தி யருளவேணும்;
பிறந்து இறந்து	பிறப்பதும் இறப்பதுமாகி		(இதுவே அடியேனுடைய வேண்டுகோள்.)

அங்கயல் பாய்வயல் தென்னரங்கன் * அணியாகமன்னும்
பங்கய மாமலர்ப் பாவையைப்போற்றுதும் * பத்தியெல்லாம்
தங்கிய தென்னத் தழைத்துநெஞ்சே நந்தலைமிசையே
பொங்கிய கீர்த்தி * இராமாநுசனடிப் பூமன்னவே. (க0௮)

நெஞ்சே	ஓ மனமே!	பொங்கிய கீர்த்தி இராமாநுசன் அடிப்பூ	பரந்த புகழுடையரான எம்பெருமானாருடைய திருவடித் தாமரைகள்
பத்தி எல்லாம் தங்கியது என்னத் தழைத்து	பக்தியெல்லாம் நம்மிடத்திலே குடிகொண்டதென்று சொல்லும்படியாக விருத்திபெற்று,		

நம் தம்மிளையே மன்ன	சேமம் குசேமமே நித்ய வாஸம் பண்ணுகைப்படியாக, (நாம் செய்யவேண்டிய காரியம் என்னவென்றால்)	அணி ஆகம் மன்னும்	அழகிய திருமார்பிலே நித்யவாஸம் பண்ணுகிறவளாய்
அம் வயல் பாய் வயல் தென் அரங்கன்	அழகிய வயல் நீர்கள் பாய்கிற கழனிகள் சூழ்ந்த தென்னரங்கத்தில் உறையும் பெருமானுடைய	பங்கயம் மாமலர் பாவையை	சிறந்த தாமரைப் பூவில் பிறந்த பதுமை போன்றவளான ஸ்ரீ மஹாலக்ஷ்மியை
		போற்றுதும்	வாழ்த்துவோம்


* * *—இப்பிரபந்தத்தின் தொடக்கத்தில் "இராமாநுசன் சரணாரவிந்தம் நாம் மன்னி வாழ" என்று எம்பெருமானாருடைய திருவடித்தாமரைகளைப் பொருந்தி வாழ்வதே நமக்குப் பரம புருஷார்த்தமாக அருளிச் செய்தமையாலே அந்தப் புருஷார்த்தம் நமக்கு யாவஜ்ஜீவம் ஸித்திக்கும்படியாக—எல்லாச் செல்வங்களையும் அளிக்கவல்ல பெரிய பிராட்டியாரைப் பிரார்த்திப்போமென்கிறார்—முடிவான இப்பாட்டில்.

ஐச்வர்ய ஸம்பத்தை அளிக்கவல்ல பிராட்டியே இந்த விசேஷ ஸம்பத்தையும் அளிக்கக் கடவள் என்றதாயிற்று. ... . (க0அ)

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

திருவரங்கத்தமுதனார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.


பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
நித்யாநுஸந்தானவுரையில்
இராமாநுச நூற்றந்தாதி உரை
முற்றுப்பெற்றது.